# அழைப்புப் பணி, சீர்திருத்தப்பணி, மனப்பக்குவம், மற்றும் நினைவூட்டலுக்காக – சிந்திக்கவும் மனனமிடவும் உகந்த இறைவசனங்கள் மற்றும் நபிமொழி ..!

## திருக்குர்ஆன்

قُلْ إِنَّ صَلَاتِي وَنُسُكِي وَمَحْيَايَ وَمَمَاتِي لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ 6:162

6:162. நீர் கூறும்: “மெய்யாக என்னுடைய தொழுகையும், என்னுடைய குர்பானியும், என்னுடைய வாழ்வும், என்னுடைய மரணமும் எல்லாமே அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே சொந்தமாகும்.

قُلْ هُوَ الْقَادِرُ عَلَىٰ أَن يَبْعَثَ عَلَيْكُمْ عَذَابًا مِّن فَوْقِكُمْ أَوْ مِن تَحْتِ أَرْجُلِكُمْ أَوْ يَلْبِسَكُمْ شِيَعًا وَيُذِيقَ بَعْضَكُم بَأْسَ بَعْضٍ ۗ انظُرْ كَيْفَ نُصَرِّفُ الْآيَاتِ لَعَلَّهُمْ يَفْقَهُونَ 6:65

6:65. (நபியே!) நீர் கூறும்: “உங்கள் (தலைக்கு) மேலிருந்தோ அல்லது உங்களுடைய கால்களுக்குக் கீழிருந்தோ உங்களுக்குத் துன்பம் ஏற்படும்படி செய்யவும் அல்லது உங்களைப் பல பிரிவுகளாக்கி உங்களில் சிலர் சிலருடைய கொடுமையை அனுபவிக்கும்படிச் செய்யவும் அவன் ஆற்றலுள்ளவனாக இருக்கின்றான்.” அவர்கள் விளங்கிக் கொள்வதற்காக (நம்)வசனங்களை எவ்வாறு (பலவகைகளில் தெளிவாக்கி) விவரிக்கின்றோம் என்பதை (நபியே!) நீர் கவனிப்பீராக.

## அல்ஹதீஸ்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘என்னுடைய இரப்பிடத்தில், நான் மூன்று (விஷயங்களை) கேட்டேன்.., அவைகளில் இரண்டை எனக்கு அருளினான்; ஒன்றை எனக்குத் (தராமல்) தடுத்துவிட்டான். நான் கேட்டேன்: ‘என் சமூகத்தை பஞ்சத்தால் அழித்திடாதே! அதனை எனக்கு வழங்கினான்..‘ ,இன்னும் என் சமூகத்தை நீரில் மூழ்கடித்து அழித்திடாதே! ’ என்றேன். இதையும் அவன் எனக்குத் தந்துவிட்டான். ‘இன்னும் அவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளாதிருக்க வேண்டும்’ என வேண்டியபோது, அதிலிருந்து என்னைத் தடுத்துவிட்டான்’’. (நூல்: முஸ்லிம் - ஹதீஸ் எண்: 2890)

# سُوْرَةُالاَعْرَافِ

## ஸூரதுல் அ.்.ராப்
## சிகரங்கள்

7

இது ‘மக்கீ’
ஸூரா ஆகும்.

## சில நோக்கங்கள்
## *Few Objectives*

- ‘இஸ்லாத்தின் செய்தியை மக்களிடம் கொண்டு செல்வதே’, நபிமார்கள் யாவரும் கண்ட இயக்கமாகும். அவர்களின் பொறுப்பும் இதுவாகவே இருந்தது..,அதே சமயம் ஒருவர் இஸ்லாத்தை ஏற்பது, இவர்களின் வசத்தில் இல்லை. அப்படியென்றால், மக்கள் இஸ்லாத்தைத் தழுவாதிருந்தால், இவர்களுக்கு நிராசை எதற்காக வரப்போகிறது..?
- ஆதம் (அலை) முதல் இறுதிநபி வரையுள்ள நபிமார்களின் சரித்திரம், விரிவாகப் பேசப்படுகின்ற முதல் அத்தியாயமாகும். இதில் நபி நூஹ் (அலை), ஹூது (அலை), ஸாலிஹ் (அலை), ஷுஅய்ப் (அலை), மூஸா (அலை) முதல் முஹம்மத் (ஸல்) வரை உள்ள அனைத்து நபிமார்களுடைய விபரங்களும், இடம்பெற்றுள்ளன.
- இந்த அத்தியாயத்தில். சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் இடையில் நடைபெறும் நிரந்தரப் போராட்டம், படம்பிடிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அசத்தியம், உலகில் குழப்பத்தை எப்படி உருவாக்குகிறது.., என்பதும் தெளிவாக்கப்பட்டுள்ளது.
- இந்த ஸூராவில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு இறைத் தூதர்களின் சரித்திரமும் இரண்டு விடயங்களை வெளிப் படுத்துகின்றன. 1-நன்மை மற்றும் தீமைகளுக்கிடையே நடைபெறும் போராட்டம். 2-ஆதம் (அலை) அவர்களின் சந்ததியினரோடு ஷைத்தான் மேற்கொள்ளும் சூழ்ச்சிகள். ஆதம் (அலை) அவர்கள், அல்லாஹ்விற்கு மாறுசெய்யும் வகையில், அவர்களின் உள்ளத்தில் ஊசலாட்டத்தை உண்டாக்கிய, இந்த எதிரியின் விஷயத்தில், மனிதர்கள் சுதாரித்துக் கொள்ளவேண்டுமென்பதற்காக, இந்த அத்தியாயத்தில் ‘யா பனீ ஆதம’ - ஆதமின் புதல்வர்களே! என அல்லாஹ் நான்கு முறை அழைப்பு விடுக்கிறான்.1

## சில தலைப்புகள்
## *Few Topics*

1. திருக்குர்ஆன் அல்லாஹ்விடமிருந்து வந்துள்ள சத்தியமாகும்; அதனைப் பின்பற்றுவது கட்டாயமானதாகும். (01-3)

---

1. (அள்வாவுல் பயான் பீ ஈளாஹில் குர்ஆன் பில் குர்ஆன் 20 : 117)

2. இவ்வுலகிலும் மறுமையிலும் அவிசுவாசிகள் மற்றும் பொய்ப்பிப்பவர்களின் முடிவு எடுத்துரைக்கப் படுகிறது. (9-4)
3. பூமியில் அல்லாஹ் ஏற்படுத்திய (கிலாபத்) பற்றிய வரலாறு, ஆதம் (அலை) அவர்களைச் சிரம்பணிந்து (சிறப்பிக்க), ஷைத்தானின் மறுப்பு மற்றும் பூமிக்கு ஆதம் (அலை) அனுப்பப்படுதல். (10-25)
4. ஆதம் (அலை) அவர்களின் சந்ததியினர், அல்லாஹ்வின் அருட்கொடைகளையும், அவனுடைய வல்லமைகளையும், எண்ணிப்பார்த்திடுக! அத்துடன் ஷைத்தான் உருவாக்குகின்ற ஊசலாட்டம் குறித்து எச்சரிக்கை பெறுக! (26-27)
5. ‘அகீதா’ - கொள்கை விளக்கத்தில் குப்பார்களின் - நிராகரிப்பாளர்களின் வழிகேடு மற்றும் அல்லாஹ் தடைசெய்திருப்பவை பற்றிய விபரங்கள்..!(28-33)
6. மனிதர்கள் அனைவருக்கும் முடிவு மரணமே! (34)
7. இறைத்தூதர்கள் கண்ட இயக்கமும், அவர்களை ஏற்றுக் கொண்டவர்கள் பெறுகின்ற பரிசுகள் பற்றிய விபரமும். (35)
8. இறைத்தூதர்களுடன் நிராகரிப்பாளர்கள் நடந்துகொண்ட விதமும், மறுமை நாளில் அவர்கள் காணப்போகும் விளைவும்..!(36-41)
9. மறுமை நாளில் விசுவாசிகள் பெறுகின்ற வெகுமதிகளின் விபரங்கள்..!(42-43)
10. சுவனம் - நரகம் மற்றும் அஃராப் (சிகர)வாசிகள் மத்தியில் நிகழவிருக்கும் உரையாடல். (44-51)
11. திருக்குர்ஆனை இறக்கியருளியதன் மூலம் காபிர்கள் மீது ஆதாரத்தை நிலைநாட்டிய விபரமும், மறுமை நாளில் அதனை நிராகரிப்பாளர்கள் அங்கீகரிப்பதும்..!(52-53)
12. அல்லாஹ்வின் ஆற்றல் மற்றும் அவனுடைய தாராளமான கிருபைக்கான ஆதாரங்களும். ((54-56)
13. விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகளுக்கு, மரணத்திகுப் பின் எழுப்பப்படுவதற்கான ஆதாரங்கள். (57-58)
14. நபிமார்கள் நூஹ் (அலை), ஹூது (அலை), ஸாலிஹ் (அலை), லூத் (அலை), மற்றும் ஷுஅய்ப் (அலை) ஆகியோர்களின் சரித்திரங்கள். (59-93)
15. ஒரு சமுதாயத்தை அழிப்பதற்கு முன் அல்லாஹ் அவர்களைச் சோதிப்பது நடைமுறையில் உள்ளதாகும்.(94-95)
16. இறை மறுப்பாளர்களின் இயல்பும், அவர்களுக்கான எச்சரிக்கையும்!(95-102)
17. பிர்அவ்ன் உடன் மூஸா (அலை) அவர்களின் - சரித்திரம்; பிர்அவ்ன் கூட்டத்தார்களுக்கு நிகழ்ந்த கதி..!(103-145)
18. பெருமையடிப்பவர்களுக்கும், பொய்யுரைப்பவர்களுக்கும் உரிய

தண்டனை விபரம்! (146-147)

19. ‘ஸாமிரீ ’ என்பவன் மூஸா (அலை) இல்லாத சமயத்தில், பனூ இஸ்ராயீல்களை வழி கெடுத்த விபரம். (148-154)

20. ரஸூல் (ஸல்) (அலை) அவர்களின் நபித்துவம், உலகமனைத்திற்கும் உரியதாகும்; அனைத்து சமூகத்தினரும் அவர்களைப் பின்பற்றுவது கட்டாயமானது ஆகும். (155-158)

21. பனூ இஸ்ரவேலர்கள் சிலர் சத்தியத்தைப் பின்பற்றுகிறார்கள்; அவர்களுக்கு அல்லாஹு தஆலா வழங்கிய அருட்கொடைகள் விபரம்..(159-160)

22. பனூ இஸ்ரவேலர்கள் சரித்திரம்.., குறிப்பாக சனிக்கிழமை நிகழ்வு! (161-171)

23. ஆதமின் சந்ததியினர்கள் யாவரும் மேற்கொண்ட உறுதிமொழி மற்றும் அவர்களின் தன்மை. (172-174)

24. அல்லாஹ்வின் திருநாமங்கள், மூலம் துஆ பிரார்த்தனை செய்யும் விபரம்!(180)

25. நேர்வழி பெற்றவர்களின் விபரங்கள் (181)

26. யார் அல்லாஹ்வின் அத்தாட்சிகளை ஆழ்ந்து சிந்திக்க மறக்கிறார்களோ.., அத்துடன் அவனை மறுப்பார்களோ அவர்கள் வழிதவறியவர்கள் ஆவர். (182-186)

27. கியாமஹ் - மறுமை நாள் எப்பொழுது வரும்? என்பதை அல்லாஹ் மட்டுமே அறிவான். (187)

28. இரஸூல் (ஸல்) அவர்கள் மனிதர்; தனக்கு நன்மை - தீமை செய்திட சக்தியற்றவர்கள்; மறைவான செய்திகளை அறிய இயலாதவர்கள்!(188)

29. முஷ்ரிக்குகள் - இணைவைப்பாளர்களின் இட்டுக்கட்டுகள் மற்றும் அவைகளுக்கான மறுப்புகள். (189-198)

30. உன்னதமான நற்பண்புகள் குறித்த வழிகாட்டுதல்கள் (199-203)

31. திருக்குர்ஆன் ஓதப்படுகின்றபோது அமைதிகாப்பதன் விபரம்.(204-205)

32. ஒரு மு.்.மின் - விசுவாசியின் தன்மை (206)

## சில பாடங்கள்
## குநற டநளளழளே

1. இவ்வத்தியாயத்தில் இந்த மூன்று வகையான மனிதர்கள் பற்றி பேசப்படுகிறது..

1-அல்லாஹ்விற்குக் கீழ்ப்படிகின்றவன் (மு.்.மின்)

2- கீழ்ப்படியாதவன்

3- அலட்சியப் படுத்துகிறவன்.

2. மூஸா (அலை), பிர்அவ்ன், மற்றும் மந்திரவாதிகள் சரிதை.., சத்தியத்தை அறிந்த மாத்திரத்தில் பிர்அவ்னின் எச்சரிக்கையை மீறி சற்றும் தயங்காமல் அதை ஏற்றுக் கொண்ட, அந்த மந்திரவாதிகள். 1

3. இவ்வத்தியாயத்தின் இறுதியில், (அல்லாஹ்வை) மறந்தவர்களாக ஆகக் கூடாது; அவனை திக்று செய்கிறவர்களாக – நினைவு கூர்ந்திடுவோராக இருந்திடுக! என எடுத்துரைக்கப்படுகிறது.

4. இவ்வத்தியாயத்தில் பனு இஸ்ராயீல் மக்களிடையே இருந்த மூன்று வகையான தன்மையுடையோர் பற்றிப் பேசப்படுகிறது.2

1- அல்லாஹ்விற்குக் கீழ்ப்படிகின்றவர் (மு.ஃ.மின்)

2- கீழ்ப்படியாதவர்

3- வேடிக்கையாளர். இதில் - வேடிக்கை பார்ப்பவர்கள் சொல்வர்: ...

وَإِذْ قَالَتْ أُمَّةٌ مِّنْهُمْ لِمَ تَعِظُونَ قَوْمًا ۙ اللَّهُ
مُهْلِكُهُمْ أَوْ مُعَذِّبُهُمْ عَذَابًا شَدِيدًا ۖ

(அவ்வூர் முஸ்லிம்கள் சிலர் அறிவுரை தந்தபோது) வேறு சிலர் 'எவரை அல்லாஹ் அழித்திடவோ அல்லது கடுமையான வேதனை தந்திடவோ நாடியிருக்கின்றானோ, அவர்களுக்கு நீங்கள் ஏன் உபதேசிக்கிறீர்கள்?' என்றார்கள்.

இதற்கு பதில் தரும் வகையில் முஸ்லிம்கள்

قَالُوا مَعْذِرَةً إِلَىٰ رَبِّكُمْ وَلَعَلَّهُمْ يَتَّقُونَ

"உங்கள் இறைவன் சுமத்தியுள்ள பொறுப்பை (நிறைவேற்றி) அதில் இருந்து விலகுவதற்காகவும், (தீய) அவர்கள் அல்லாஹ்வை அஞ்சி (திருந்தி)டவும்தான்" 7:164 என்றார்கள் .

5. இந்தத் திருக்குர்ஆனை அல்லாஹு தஆலா மக்கள் நேர்வழி பெறுவதற்காக முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது இறக்கியுள்ளான். மக்களை, மூட நம்பிக்கைகளில் இருந்து மீட்டெடுத்து, சமூகத்தை நல்லதொரு வழிமுறையில் கொண்டுவருவதும் இந்த வேதத்தின் ஒரு நோக்கமாகும்.

6. திருக்குர்ஆனின் இரு நோக்கங்கள் இதோ:-

1- எச்சரிக்கை: இறைத் தண்டனை குறித்து மக்களைத் தெளிவாக எச்சரித்தல்

2- உபதேசம்: விசுவாசிகளுக்கு உபதேசித்தல்.

---

1. இறை வசனம்: 124-126
2. விபரங்களுக்கு- தப்ஸீர் தபரீ

7. இத் திருக்குர்ஆன் நபி (ஸல்) அவர்களுக்கு மக்களை எச்சரிக்கின்ற பொறுப்பை வழங்கியது போல், மக்களுக்கும், அதனைப் பின்பற்றி நடக்கின்ற மற்றும் அதனைச் செயல்படுத்துகின்ற பொறுப்பைச் சுமத்துகிறது.
8. திருக்குர்ஆனைத் தவிர்த்துவிட்டு, வேறொரு புத்தகத்தில் நேர்வழியைத் தேடுவது கடைந்தெடுத்த ‘குப்ரு’ - இறைநிராகரிப்பு ஆகும். பின்பற்றி நடப்பதற்கு திருக்குர்ஆன் மட்டும் போதாதெனக் கருதி, மற்றொரு நூலையும் பின்பற்றி நடந்தால், இதுவும் ‘ஷிர்க்’ - இணைவைப்பே ஆகும்.
9. எத்தனையோ சமுதாயங்களை அவர்கள் ஓய்வாக அல்லது அலட்சியமாக இருந்தபோது அல்லாஹு தஆலா அவர்களுக்கு வேதனையை ருசிக்கவைத்து அழித்திருக்கிறான். இந்த அலட்சியவாதிகள், இறைவேதனையைக் கண்டபோது, இணைவைப்புக் குற்றத்தை ஒப்புக்கொள்ளலானார்கள்; அதனால் எந்த ஒரு பயனும் விளையவில்லை!
10. பொய்ப்பிப்பவர்களுக்கு இறங்குகின்ற வேதனைதான் முழுமையான தண்டனை என்பதில்லை; மறுமையின் வேதனையோ, மிகக் கடுமையானது; அதி பயங்கரமானது!!
11. அனைத்து சமுதாயத்தினரும், இறைத் தூதர்களும் ஒன்று சேர்கின்ற மறுமை நாளில், முஷ்ரிக் - இணைவைப்பாளர்களும் , நிராகரிப்பாளர் - காபிர்களும், மிகவும் இழிவடைவார்கள்.
12. மறுமை நாளில் அடியார்களின் செயல்கள் சத்தியத் தராசு (மீஸானில்) எடை போடப்படும். அப்போது சின்னஞ் சிறிய விஷயங்களும் நிறுக்கப்படும்.
13. இறுதி நாளன்று மக்கள் இருகூட்டத்தினராய் ஆவர்.., யாருடைய தராசு இறை விசுவாசத்தாலும் நற்காரியங்களாலும், எடை கூடியதோ அவர்கள் - ஒரு கூட்டத்தினர்! யாருடைய தராசு இறைநிராகரிப்பாலும் வழிகேடுகளாலும், கனம் அடைந்ததோ அவர்கள் - மற்றொரு கூட்டத்தினர்!
14. قال أنظرني الى يوم يبعثون - ‘‘மீண்டும் எழுப்பப்படுகின்ற அந்நாள் வரை எனக்கு அவகாசமளிப்பாயாக!’’ என ஷைத்தான் வேண்டினான்.
15. இந்த பூமி மனிதர்களுக்கு வசிப்பிடமாகவும், வாழ்வதற்குரிய கருவியாகவும் ஆகியுள்ளது அவர்கள் இதிலே பிறப்பார்கள்; இதனால் பயன் பெறுவார்கள்; இதில்தான் மரணித்து மீண்டும் எழுப்பப் படுவார்கள்.., என்கிறபோது ‘‘இப் பூவுலகில் இதயத்தை பறிகொடுத்திடக் கூடாது’’ என்பதற்கு இதில் ஒரு தெளிவான சமிக்ஞை இருக்கிறது.
16. மனிதன் உருவானதிலிருந்தே, ஷைத்தானுக்குப் பகை தோன்றித் தொடர்ந்து வருகிறது.. அவர்களை வழிகெடுக்க மனதில் ஊசலாட்டத்தைப் போடுகிறான்..! இறை நிராகரிப்பிலும்,

வழிகேட்டிலும் அவர்களைத் தள்ளுகிறான்..!! பகையை மறைக்காத பகிரங்கமான விரோதி அவன்..!!! எனவே எல்லா முஸ்லிம்களும் அவனிடத்தில் எச்சரிக்கையுடன் நடந்திடுக.

17. உடை ஓர் அருட்கொடை! மானம் பாதுகாக்கப்படுகிறது; வெயிலிலும், குளிரிலும் பாதுகாப்பு கிடைக்கிறது; அழகு கூடுகிறது.. ஆடையணிவதில் இப்படிப் பயன்கள் பல உள்ளன. அதே சமயம் மானக் கேடானவைகளில் விழவைப்பதற்காக, ஷைத்தானும், ஆதரவாளர்களும் வெட்கத் தலங்களைத் திறந்திடவும், நிர்வாணமாக்குவதற்காகவும் அழைப்பு விடுக்கிறார்கள்.

18. உடை மனிதனின் உடலை மறைக்கிறது. உள்ளத்திற்கும் உடை தேவைப்படுகிறது..அதுவே இறையச்சம் எனும் ஆடையாகும். இறையடியான் எப்பொழுதும் அல்லாஹ்வை எண்ணிப் பார்த்திடுக! அவனுக்குக் கட்டுப்படுவதில் பேராசை கொண்டிடுக!! மாறு செய்வதில் இருந்து விலகி ஓடுக!!!

19. ஷைத்தான் அதிகமான மக்களை வழிகெடுத்திருக்கிறான். அவர்களுக்கு ஷிர்க்கையும் சிலை வணக்கத்தையும் - தீமைகளையும் ஆபாசங்களையும் அழகாக்கிக் காட்டியுள்ளான். பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்தல், அநியாயமாகக் கொலை செய்தல், நிர்வாணமாக கஃபாவை சுற்றுதல் போன்றவை யாவும் இதில் அடக்கமே! எனவே அந்த ஷைத்தானை விட்டும் தப்பிக்க, அல்லாஹ்விடம் பாதுகாப்பைக் கேட்டு வரவேண்டும்.

20. இணைவைப்பாளர்கள் தமது தவறுகளை நியாயப்படுத்த எப்போதும் பின்வரும் இரு காரணங்களைக் கூறுவர். 1)முன்னோர்கள் இவ்வாறு செய்திடக் கண்டுள்ளோம். 2)இது அல்லாஹ்வின் கட்டளையே!. இந்த (நொண்டிச்) சாக்குகள் அசத்தியமானவை; அசிங்கமானவை. ஏனெனில் மோசமானவைகளைச் செய்திட அல்லாஹ் உத்தரவிடமாட்டான்.

21. அல்லாஹ் நீதி – நியாயத்தை ஏவுகிறான்..இந் நீதியின்பால் அழைக்கிறான்.

22. இறை இல்லங்களுக்கு வருவோர் அலங்காரத்தைக் கடைபிடிக்க கட்டளையிடுகிறான்.

23. அழகான மதிப்புமிக்க ஆடைகள் மற்றும் சிறப்பான உணவைப் பயன்படுத்தத் தடை இல்லை. ஆனால் ஹராமானவை, வீண்விரயமானவை, கர்வமானவை மற்றும் ஷரீஅத்தால் தடைசெய்யப்பட்டவை, இவைகளில் இடம்பெறாமல் இருக்கவேண்டியது நிபந்தனையாகும்.

24. அல்லாஹு தஆலா அலங்காரங்களையோ, தூய உணவையோ தடுக்கவில்லை. ஆனால் அசிங்கமான பேச்சுக்களைத் தடை

செய்கிறான்...வெளிப்படையாக அல்லது மறைவாக இருப்பினும் சரியே!

25. ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒரு முடிவு காலம் உண்டு. அல்லாஹ் தன் பரந்த ஞானத்தால் அதனை அறிந்து வைத்துள்ளான். அதனை அனைவரும் அடைந்தே தீருவர். இந்நேரத்தை முற்படுத்தவோ பிற்படுத்தவோ இயலாது.

26. ஒவ்வொருவருக்கும் மரண நேரம் நிச்சயிக்கப்பட்டுள்ளது..திடீர் மரணமோ கொலையோ அதுவே அவருடைய இறப்பிற்குரிய காலமாகும்.

27. மனிதர்களைக் கைவிடாமல் அவர்களுக்கு அல்லாஹ் நேர்வழியைத் தந்திருப்பது, அவன் அருளிய ‘இரஹ்மத்’ ஆகும். மக்களை எச்சரித்திடவும் வழிகாட்டவும் இறைத் தூதர்களை அனுப்பியுள்ளான். இவ்வாறு நபிமார்களை நம்பி, பாவங்களில் இருந்து விலகி நடப்போர், கவலைப்பட மாட்டார்கள்..பயப்பட மாட்டார்கள். ஆனால் பொய்ப்பிப்பவர்களோ நரகில் சென்றிடுவர்.

28. பலஹீனமானவர்களோ, ‘பிரமுகர்கள் மற்றும் தலைவர்கள் தங்களை வழிகெடுத்தனர்’ என முறையிடுவர்.

29. பொய்ப்பிக்கின்ற அனைவருக்கும் அல்லாஹ் இதனை வாக்களித்துள்ளான்: ‘‘அவர்களுக்காக – அவர்களின் பிரார்த்தனைகளுக்காக – அவர்களின் அமல்களுக்காக வானத்தின் வாசல்கள் திறக்கப்படமாட்டாது; அனைத்தும் திருப்பி அனுப்பப்பட்டு அவர்கள் நரகத்திற்குச் செல்வர்.’’

30. அல்லாஹ் சொர்க்கவாசிகளுடைய நெஞ்சங்களில் இருந்து குரோதத்தை அகற்றிவிடுவான். இதில், உள்ளத்தை வன்மம் மற்றும் குரோதத்தில் இருந்து சுத்தப்படுத்தி, பரிசுத்தமாக வைத்திட அறிவுறுத்தல் உள்ளது.

31. மறுமை நாளில் அனைவரிடமும் அமல்களைப் பற்றி விசாரனை செய்யப்படும். சுவனவாசிகளும் நரகவாசிகளும் தத்தமது அடையாளங்களால் அறியப்படுவர். அவ்விருவருக்கும் இடையில் தடுப்பு இருக்கும்.

32. உலக செல்வச் செருக்கிலும், மக்கள் பலத்திலும் இருமாந்து இருக்கிறார்களே அவர்கள், ‘இவையனைத்தும் மறுமையில் எந்தப் பயனையும் ஏற்படுத்தாது’ என்பதை அறிந்திடுக!

33. நரகவாசிகளின் எந்த எதிர்பார்ப்பும் நிறைவேறாது.

34. அல்லாஹ் சத்திய வேதத்தை இறக்கியுள்ளான். அதனை விரிவாகவும் தெளிவாகவும் அருளியிருக்கிறான். மேலும் விசுவாசிகளுக்கு நேர்வழியாகவும், அருளாகவும் மற்றும் நிவாரணியாகவும் ஆக்கியுள்ளாற்ன்.

35. அல்லாஹ் வானங்களையும் பூமியையும் ஒரே நொடியில் படைக்க முடியும். இருப்பினும் அடியார்கள், அல்லாஹ்வின்

மென்மை மற்றும் அவகாசமளிக்கும் அணுகுமுறையை அறிந்திடவே, அவைகளை ஆறுநாட்களில் படைத்தான். மட்டுமின்றி அல்லாஹ்விடம் அனைத்திற்கும் நிர்ணயிக்கப்பட்ட நேரமுண்டு.

36. அல்லாஹ் தன் மகத்துவத்திற்கும் வல்லமைக்கும் ஏற்றவாறு அர்ஷ் - இறையாசனத்தில் அமர்ந்திருக்கிறான். படைப்புகளில் அவனுக்கு உவமைகூற முடியாத அளவிற்கு அவன் தூய்மையானவன். அல்லாஹ் தன் அடியார்களுக்கு பிரார்த்திக்கக் கட்டளையிட்டிருக்கிறான்.

37. ‘துஆ’ செய்கிறவன் பயம், நடுக்கம், உள்ளச்சம், மற்றும் தாழ்மையைக் கடைபிடித்திடுக!

38. இவையும் வேண்டுதலின் ஒழுங்குகளே! எல்லை மீறக்கூடாது: உதாரணமாக இப்பூவுலகில் நிரந்தரமாக இருந்திட வேண்டுமென துஆ செய்யக் கூடாது. சாத்தியமற்றதைக் கேட்கக் கூடாது: உதாரணமாக நபிமார்களின் அந்தஸ்தைக் கேட்கக் கூடாது. கத்தவும் கூடாது.

39. மென்மையாகவும் அச்சம் மற்றும் நம்பிக்கையுடனும் துஆ செய்திடுக! அவசரப்படாமல் இருந்திடுக!

40. அனைத்து விதமான குழப்பங்களும் தடுக்கப்பட்டிருக்கின்றன; அல்லாஹ்வை மறுப்பதும் அவனுக்கு மாறுசெய்வதும் குழப்பங்களே!

41. நல்ல நிலம் அல்லாஹ்வின் உத்தரவால் சிறந்தவைகளை விளைவிக்கிறது. மோசமான நிலமோ புற்பூண்டுகளைத் தவிர வேறு எதனையும் வெளியாக்குவதில்லை. இதயங்களுக்கும் இதே உதாரணம்தான்.

42. இறை அழைப்பாளர்களும் சீர்திருத்தவாதிகளும், பொறுமை, சகிப்புத்தன்மை, மற்றும் சுறுசுறுப்புடன், ‘த.ஃவஹ்’ - அழைப்புப் பணியையும் தப்லீ.ஃ. - எடுத்தியம்பும் பணியையும் செய்திடுக! மக்களோடு மதிநுட்பத்துடன் செயல்படுக!!

43. ‘ஸமூது’ கூட்டத்தினர் தம்முடைய செழிப்பு, பலம், மிதமிஞ்சிய செல்வம் மற்றும் அதிகாரத்தால் அநீதி மற்றும் குழப்பத்தில் மூழ்கிக்கிடந்தனர்.

44. அந்த (ஸமூது) சமுதாயத்தினர் (அற்புதத்தில் தரப்பட்ட) ஒட்டகத்தை அறுத்துப் போட்டனர். அதன் காரணமாக வேதனை வந்திறங்கியது. இது அவர்களின் அநீதி மற்றும் குழப்பத்திற்கான தெளிவான அத்தாட்சியாகும்.

45. அந்த சமூகத்தினர் அளந்து கொடுப்பதிலும் நிறுவையிலும் குறைவு செய்தனர். மக்களின் செல்வத்தை தவறாக அபகரித்தனர். ஷுஅய்ப் (அலை) அம்மக்களின் சம்பாத்தியத்தையும் வாழ்க்கை முறையையும் சீர்படுத்த அழைப்புப்பணி செய்துவந்தார்கள்.

46. அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டுவதை விடுத்து, அவனை விசுவாசம் கொள்வதால் நன்மையும் அருளும் கிடைக்கும்.

47. எப்பொழுது இறைத்தூதர் அனுப்பப்பட்டாலும், அந்த சமுதாயத்திற்கு (திருந்திட) அவகாசம் தரப்படும்; விசுவாசத்தின்பால் திரும்ப பல சோதனைகளிலும் அந்த சமூகத்தவர்கள் ஆழ்த்தப்படுவார்கள்.

48. ‘இந்த சோதனைகள் நம் முன்னோர்களுக்கும் வந்தவைகளே’ எனக் கருதி இறைத் தூதரின் பேச்சை ஏற்றிட மறுத்துவிட்டால் அவர்களுக்கு அழிவு உறுதியே..!

49. அல்லாஹ் மக்களுக்கு தன் அருட்கொடைகளைத் தந்து, கொஞ்சம் கொஞ்சமாக இறுக்குவான். மனிதன் தன் வியாபாரம், பொருள், செல்வம், குடும்பம், பிள்ளைகள் என மகிழ்ந்து கிடக்கும்போது, இவை யாவும் அழிந்து போகும்.

50. அதிகமான பொருள் மற்றும் செல்வத்தினால், சிறப்பான வாழ்வைக் காண முடியாது. விசுவாசம் மற்றும் இறையச்சத்தால்தான் இது சாத்தியம் ஆகும்.

51. குறிப்பிடப்படுகின்ற நபிமார்களின் சரித்திரங்கள் மூலமாக நபி (ஸல்) அவர்களுக்கு ஆறுதல் சொல்லப்படுகிறது; திருக்குர்ஆன் கூறுகின்ற சரித்திரங்களின் முக்கியத்துவமும் புலப்படுகிறது.

52. நிராகரிப்பாளர்கள் எப்போதுமே, தம் ஒப்பந்தத்தின்படி நடந்துகொள்வதில்லை; அதைப் பேணுவதில்லை. மட்டுமின்றி அதனை முறிக்கின்றார்கள். இதன் மூலம் வேதனையால் பிடிக்கப்படுகிறார்கள்.

53. முழு மனித வரலாற்றில், நிகழ்ந்த மாபெரும் சோதனைகளில் ஒரு பெருஞ்சோதனை, மூஸா (அலை) அவர்கள் கண்ட சோதனை ஆகும். ஏனென்றால் அவர்கள், தன்னைக் கடவுளெனக் கூறிய பிர்அவ்னை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

54. எப்பொழுதும் நபிமார்கள், இறையழைப்பாளர்கள், மற்றும் விசுவாசிகளின் வாய்களை அடைப்பதற்காக, அநியாயக்காரர்கள் கடைபிடிக்கும் வழிமுறை ஒன்றே; அது அவர்கள் மீது இட்டுக்கட்டுவதே ஆகும்.

55. ஓர் ஆட்சியாளரின் மனம், எப்போது அசுத்தமடைகிறதோ அவரைத் திருத்துவது இயலாததாக ஆகிறதோ அப்போது அவர் திருந்துவதைப் பற்றி சிந்தித்தால், அவரது அகம் அதை அனுமதிக்காது. இன்னும் அசத்தியம்தான், அவருக்கு அழகானதாகக் காட்சி தரும். பிறகு அவர் தன் வழிகேட்டிலேயே அடம்பிடித்து நிற்பார்.

56. கஷ்டங்கள் மற்றும் சோதனைகளில் இருந்து விடுபட, அல்லாஹ்விடம் துஆ - பிரார்த்திக்க வேண்டும்; துயரமான நேரங்களில், பொறுமை காட்டவேண்டும்.

57. பொய்ப்பிப்பவர்களை கஷ்டங்கள் மூலமாகவும், சுகபோகத்தின் மூலமாகவும் சோதிப்பது அல்லாஹ்வின் வழிமுறையாகும்.

58. பிர்அவ்ன் உடைய சமூகத்தினர், நன்மையான காரியம் நடைபெற்றால், 'எங்களுக்கு ஏற்றகாரியம் நடக்கிறது' என்பர். ஏதேனும் தீமை வந்தடைந்தால் 'மூஸா (அலை) அவர்களால் வந்த வினை (பீடை)' என்பர்.

59. فانتقمنا منهم – அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானது; அதற்கு உரிய நேரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது; தன் வாக்குறுதியில் இருந்து அவன் பின் வாங்கமாட்டான்; அவ்வாறே உரிய நேரத்தில் பிர்அவ்ன் அழிக்கப்பட்டான்.

60. தலைமைத்துவத்தின் முக்கியத்துவம், தெரிய வருகிறது..! தலைமையின்றி சமூக அமைப்பு இருக்கலாகாது. இச் செயல்பாட்டையே நபி (ஸல்) ஜிகாத் மற்றும் பயணங்களில் அமல்படுத்தினார்கள்.

61. அல்லாஹ்வைக் காண்பதை, அவன் மறுமையில் ஆக்கியிருப்பது, அவனுடைய ஞானத்தில் உள்ளதாகும்.

62. நபிமார்களின் தவ்பா – பாவமன்னிப்பு அவர்களின் பாவத்தால் அல்ல; அல்லாஹ்வின் நெருக்கத்தை, அவர்கள் விரும்பியதால் விளைந்ததாகும்.

63. அல்லாஹ் யாரை விரும்புகிறானோ அவரைத் தேர்ந்தெடுக்கிறான்; அவர்களின் தரத்தை மேம்படுத்துகிறான். மூஸா (அலை அவர்களைத் தெரிவு செய்த அல்லாஹ்.., அவர்களிடம் உரையாடினான்..!.

64. மூஸா (அலை) ஒரு போதும் தனக்காகக் கோபம் கொள்ளவில்லை; அல்லாஹ்விற்காகக் கோபமுற்றார்கள்; தன் மக்கள் புரிந்த தவறான காரியத்திற்காகக் கோபமடைந்தார்கள்..!

65. தனிமனிதன் மற்றும் பொதுமக்களுக்காக (பாவமன்னிப்பின் வாசல்) திறந்திருக்கிறது.

66. முஹம்மத் (ஸல்) அவர்களின் நபித்துவம் (உலக மக்கள்) அனைவருக்கும் பொதுவானதாகும்.

67. அல்லாஹ் வகுத்த எல்லைகளை மீறி நடப்பதும், அவன் தடுத்திருப்பவைகளில் மூழ்கிக் கிடப்பதும், அல்லாஹ்வின் பிடி மற்றும் தண்டனைக்கும் வழிகோலும் காரணங்களாகும்.

68. நன்மையை ஏவித் தீமையைத் தடுப்பதன் சிறப்பம்சம், அல்லாஹவின் தண்டனை மற்றும் கோபத்தில் இருந்து சமுதாயம் பாதுகாக்கப்படுவதாகும்.

69. 'ஆதமுடைய மக்கள் அல்லாஹ்வை மட்டும் வணங்க வேண்டும்; அவனுக்கு நிகராக யாரையும் இணை கற்பிக்கலாகாது' என அவர்களிடம் அல்லாஹ் உறுதி மொழி வாங்கியுள்ளான். இந்த

இயல்பான தன்மையின் மீதுதான் அல்லாஹ் அவர்களைப் படைத்து உள்ளான்.

70. அல்லாஹ் அதிகமான மனிதர்கள் மற்றும் ஜின்களை நரகத்திற்காகவே படைத்திருக்கிறான். இதில் மனிதர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டோர் இல்லை. இந்த (நரக) வழியை அவர்கள் தேடியதற்கு, அவர்கள் தாமே பொறுப்பாளர்கள் ஆவர்.

71. அல்லாஹ்விற்கு அழகிய திருநாமங்கள் உண்டு; முஸ்லிம்கள் அவனை அழைக்க அத்திருப் பெயர்களை மட்டும் பயன்படுத்துவது கட்டாயமாகும்.

72. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு மறைவான ஞானம் கிடையாது..! மறுமை எப்போது வரும் என்பதையும் அறியமாட்டார்கள்..! இதனைப் பற்றிய அறிவை அல்லாஹ்விடமே திருப்புகிறார்கள்.

73. மறைவான விஷயங்களை அறிவோர், எப்போதும் நன்மைகளையே பெறுவர்; துன்பங்களில் இருந்து தப்பிக்க முயற்சிப்பர். ஆனால் மறைவானவைகளைப் பிறருக்குத் தெரிவிக்காமல் இருப்பது, அல்லாஹ்வின் ஞானத்தில் உள்ளதாகும்.

74. உலக மக்கள் அத்தனை பேரையும், ஒரே மனிதர் மற்றும் ஒரே பெண்ணில் இருந்து படைத்து அவர்களிடையே (குடும்பச்) சந்ததிகளைத் தொடரச் செய்திருப்பது..,அல்லாஹ்வின் மகத்தான ஆற்றலாகும்.

75. பிரசவத்தின் போது, ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தமது புதுக்குழந்தை எல்லா வகையிலும் சிறப்பாகத் திகழ வேண்டும் என எண்ணுகிறார்கள்; குழந்தைக், குறையின்றி பிறந்தபின்பு, படைத்தவனை மறந்து விடுகிறார்கள்.

76. அல்லாஹ், ஒவ்வொரு இறை விசுவாசி மற்றும் நல்லடியார்களுக்கு உற்ற நண்பனாக இருக்கிறான்.

77. முஸ்லிம்கள் யாவரும், அருள்நிறைந்த வாழ்வைக்காண, திருக்குர்ஆனை மதித்தொழுக வேண்டும்; பயபக்தியுடன் - ஓர்மையுடன் - சிந்தையைச் செலுத்திச் செவியுற வேண்டும்.

## தொடர்புகள் நுட்பமான விரிவுரைகள்

❖ ‘அல் அன்ஆம் மற்றும் அல் அஃ.ராப் அத்தியாயங்கள் இரண்டிலும் குறைஷிகளின் ஆட்சேபனைகளுக்கும் சந்தேகங்களுக்கும் பதில் தரப்பட்டுள்ளது. அல் அன்ஆமில்

ஆதாரம் நிலைநாட்டப்படுகிறது... அல் அ∴ராபில் எச்சரிக்கை தரப்பட்டுள்ளது.

- ❖ ஸூரா அல் அன்ஆமில் கேள்வி – பதில் மற்றும் அழகிய தர்க்க நிலைகளும், ஸூரா அல் அ∴ராபில் முந்தைய சரித்திர உதாரணங்கள் தரப்பட்டு, எச்சரிக்கின்ற வடிவங்களும் கையாளப் பட்டிருக்கின்றன.
- ❖ அ∴ராப் (சிகரங்கள்) என்கிற பதம் இடம் பெற்றுள்ளதால் இவ்வத்தியாயம் 'அல் அ∴ராப்' எனப் பெயர் பெற்றிருக்கிறது. இது நரகத்திற்கும் சொர்க்கத்திற்கும் இடையில் உள்ள சுவர் ஆகும். இதில், எவருடைய நன்மைகளும் தீமைகளும் சம அளவில் இருக்குமோ, அவர்களே இடம் பெறுவர்.. அவர்களுடைய தீமைகள் அவர்களைச் சுவனம் செல்ல விடாமல் தடுக்கும்; நன்மைகளோ நரகில் இருந்து தடுக்கும்..! இதனால் அல்லாஹ்வின் தீர்ப்பு வரும்வரை, அதிலேயே அவர்கள் தவழ்ந்திருப்பர். 1

அழைப்புப் பணி, சீர்திருத்தப்பணி, மனப்பக்குவம், மற்றும் நினைவூட்டலுக்காக – சிந்திக்கவும் மனனமிடவும் உகந்த இறைவசனங்கள் மற்றும் நபிமொழி ..!

### திருக்குர்ஆன்

وَلَقَدْ ذَرَأْنَا لِجَهَنَّمَ كَثِيرًا مِّنَ الْجِنِّ وَالْإِنسِ ۖ لَهُمْ قُلُوبٌ لَّا يَفْقَهُونَ
بِهَا وَلَهُمْ أَعْيُنٌ لَّا يُبْصِرُونَ بِهَا وَلَهُمْ آذَانٌ لَّا يَسْمَعُونَ بِهَا ۚ أُولَٰئِكَ كَالْأَنْعَامِ
بَلْ هُمْ أَضَلُّ ۚ أُولَٰئِكَ هُمُ الْغَافِلُونَ 7:179

7:179. நிச்சயமாக நாம் ஜின்களிலிருந்தும், மனிதர்களிலிருந்தும் அநேகரை நரகத்திற்கென்றே படைத்துள்ளோம் அவர்களுக்கு இருதயங்கள் இருக்கின்றன - ஆனால் அவற்றைக் கொண்டு

1. விரிவான விபரங்களுக்கு : தப்ஸீர் தபரீ (பக் : 90)

அவர்கள் நல்லுணர்வு பெற மாட்டார்கள் அவர்களுக்குக் கண்கள் உண்டு ஆனால், அவற்றைக் கொண்டு அவர்கள் (இறைவனின் அத்தாட்சிகளைப்) பார்ப்பதில்லை அவர்களுக்குக் காதுகள் உண்டு. ஆனால் அவற்றைக் கொண்டு அவர்கள் (நற்போதனையைக்) கேட்கமாட்டார்கள் - இத்தகையோர் கால்நடைகளைப் போன்றவர்கள். இல்லை! அவற்றை விடவும் வழி கேடர்கள் இவர்கள் தாம் (நம்வசனங்களை) அலட்சியம் செய்தவர்களாவார்கள்.

## அல்ஹதீஸ்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:“ அல்லாஹ்வை நினைவு கூர்ந்திடுபவர் மற்றும் அவனை நினைத்துப் பாராதிருப்பவர் இடையே உள்ள உதாரணம், உயிருள்ளவர் மற்றும் செத்துப் போனவர் இடையே உள்ள உதாரணமாகும்”. (அல் புகாரீ : 6407)



# سُوْرَةُ الأَنْفَال

## ஸூரதுல் அன்பால்
## போரில் கிடைத்த வெற்றிப் பொருட்கள்

8

இது ‘மக்கீ’ ஸூரா ஆகும்.

## சில நோக்கங்கள்
## *Few Objectives*

- ❖ உலகம் மற்றும் சன்மார்க்க ரீதியிலான உதவிகளைப் பெற்றிடத் தேவையான அடிப்படைகளின் விபரங்கள் . 1
- ❖ இந்த அத்தியாயம் யுத்தம் தொடர்பான விதிமுறைகளைப் பேசுகிறது ... (ஜிஹாதின் போது.., இஸ்லாமிய ஒழுக்க நெறிமுறைகளில் இருந்து விலகாதிருத்தல்- சுய விருப்பத்திற்காக அல்லது அநீதியாக போர் செய்யாதிருத்தல் மற்றும் அமைதியை நிலை நாட்டுதல் - அநியாயம் புரிவோரின் கையைப் பற்றித் தடுத்தல் - அல்லாஹ்வின் வாக்கை ஓங்கச் செய்தல் .. ) 2
- ❖ இதில் இறை உதவி எப்பொழுது வரும்? எப்படி வரும்?.. என எடுத்துரைக்கப்படுகிறது. அது திடீரெனத் தோன்றி வராது.. அதனை அடைவதற்கென விதிமுறைகள் உள்ளன. படைப்புகளில் அல்லாஹு தஆலா, காரணங்களை வைத்திருக்கிறான். உண்மையான காரண கர்த்தா அவனே.

## சில தலைப்புகள்
## *Few Topics*

2. மு.ஃ.மின்களின் தன்மைகள் குறித்த விபரங்கள் (2-4)
3. பத்ரு யுத்தம் - விபரம் (5-14)
4. போரில் புறமுதுகு காட்டுவது ஹராம் ஆகும். (15-16)
5. பத்ருப் போரில் பங்கெடுத்தோர் பெற்ற, அல்லாஹ்வின் கொடைகள். (17-19)
6. அல்லாஹ் மற்றும் அவன் தூதர் (ஸல்) அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பதற்கும், அவர்களின் அழைப்பை ஏற்று நடப்பதற்கும் தூண்டப்படுகிறார்கள்; தக்வா- மூலமாகக் கிடைக்கின்ற பயன்கள். (20-29)
7. காபிர்கள் மற்றும் முஷ்ரிக் - இணைவைப்பாளர்களின் சூழ்ச்சிகளும், அதற்கான தண்டனை விபரங்களும். (30-35)

---

1. விபரங்களுக்கு: அஸ்பாபு நஸ்ருல்லாஹி லில்மு.ஃ.மினீன் அலா அ.ஃ.தாயிஹிம் -அஷ்ஷைக் பின் பாஸ்
2. விபரங்களுக்குக் (ஓஜவாதுர் ரஸூலுல்லாஹ் (ஸல்)-இஸ்மாயீல் பின் உமர் பின் கஸீர் (ரஹ்)), (அக்லாகுன்னபீ (ஸல்) பில் ஹர்ப் - அமானீ ஜகரியா அர்ரமாதீ)

8. அல்லாஹ்வின் பாதையில் இருந்து தடுப்பதற்காக ‘முஷ்ரிக்கு’-கள் மேற்கொண்ட செலவுகள்..! அதன் விளைவாக அவர்கள், இம்மையிலும் மறுமையிலும் பெறுகின்ற தண்டனைகள்..!! (36-40)
9. கனீமத் பொருட்களைப் பங்கீடு செய்வதன் சட்டம். (41)
10. ‘பத்ரு’ யுத்தத்தில் அல்லாஹ்வின் உதவி வந்த விபரம். (42-44)
11. போரிடும் வேளையில் ‘மு.்.மின்கள்’, மனத்தூய்மை (இக்லாஸ்) உடன் கருத்து வேறுபாடுகளைக் களைந்து, நிலைகுலையாது இருக்க வேண்டும் என, அழுத்தம் தரப்பட்டுள்ளது. (45-47)
12. ஷைத்தானிடம் ஏமாறாதிருக்க எச்சரிக்கை மற்றும் மு.்.மின்களைப் பற்றிய முனாபிக்குகளின் சொல்..! (48-49)
13. கடுமையான வேதனையால் காபிர்கள் எச்சரிக்கப்படுகிறார்கள். (50-51)
14. பிர்அவ்ன் கூட்டத்தார் மற்றும் முந்தைய சமுதாயத்தினர்களின் உதாரணம் தரப்பட்டுள்ளது.(52-54)
15. காபிர்களின் சில தன்மைகள் மற்றும் அவர்களோடு அமையவேண்டிய நம் அணுகுமுறைகள் விளக்கப்படுகின்றன.(55-59)
16. எதிரிகளுக்கான ஆயுதங்களைத் தயாரித்திட உத்தரவும், அவர்கள் சமாதானத்தின்பால் சாய்ந்தால் சமாதானத்தையே ஏற்பதும். (60-61)
17. நபி முஹம்மத்(ஸல்) அவர்களுக்கும் இறைநம்பிக்கை-யாளர்களுக்கும் அல்லாஹ் அருளிய பரிசுகள் மற்றும் உள்ளங்கள் இணக்கமாகுதல் பற்றிய விபரங்கள். (62-64)
18. யுத்தம் செய்திட தூண்டப்படுதல் (65-66)
19. கனீமத் பொருட்கள் மற்றும் கைதிகள் குறித்த சட்டங்கள். (67-71)
20. இஸ்லாம் தருகின்ற சகோதரத்துவமே உறுதி மிக்க சகோதரத்துவம் ஆகும். குப்பார்களுடன் மிக நெருக்கமாக இருக்கத் தடை உத்தரவு. (72-75)

## சில பாடங்கள்
### *Few Lessons*

1. முஸ்லிம்களே நீங்கள் அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்; எனவே அத்தகுதியைத் தக்கவைத்திடுக! என பயிற்றுவிக்கப் படுகிறார்கள்.
2. திட்டமிடப்பட்ட முயற்சி, தமது இறை நம்பிக்கை மற்றும் தேவையான உபகரணங்கள் - என பலத்தைத் தயார்படுத்துக!

3. அல் அன்பால் கூறும் ஒரு வழிமுறை இதோ:- ‘அஸ்ஸலாமுல் முஸல்லஹ்’ (ஆயுத-அமைதி) இன்றைய சொல்வழக்கில் peace keeping force (அமைதிப் பாதுகாப்புப் படை) எனப்படுகிறது. இஸ்லாத்தைப் பொறுத்தவரை சுயப் பாதுகாப்பு, அநீதியை முறியடிப்பது, மற்றும் சாந்தியை நிலை நாட்டுதல் ஆகியவைகளில் மட்டுமே பலத்தைப் பிரயோகம் செய்யலாம். அப்பாவிகளை வதைப்பதற்கோ – தீவிரவாத காரியங்களுக்கோ அல்ல..! 1

4. யுத்த சமயங்களில், அல்லாஹு தஆலா எப்படி உதவி புரிந்துள்ளான் என இதில் குறிப்பிடுகிறான்.
   - யுத்தத்திற்காக ஊக்கமளித்து விசுவாசிகளை அணி திரளச் செய்தான்!
   - சிறு தூக்கத்தின் மூலம் சுறுசுறுப்பைத் தந்ததோடு எதிரிகளின் எண்ணிக்கையை குறைவாக எடுத்துக்காட்டினான்!
   - உதவிக்காக வானவர்களை இறக்கிவைத்தான்!
   - சிறப்பான இடத்தையும் நேரத்தையும் நிர்ணயித்தான்!

5. முடிவைத் தீர்மானிப்பவன் அல்லாஹ்வே ஆவான்.

6. فاتقوا الله முஸ்லிம்களின் செயல்பாடுகள் யாவும் தக்வா - இறையச்சத்தின் அடிப்படையில் அமையவேண்டும்.

7. ‘ஷரீஅத்’ - சட்டத்திற்கு முன்னே, நம் கருத்தைக் கொண்டுவரக் கூடாது.

8. واطيعوا الله ورسوله - கட்டுப்பட்டு நடப்பதன் மூலமாக ஈமான் அதிகரிக்கும்; மாறுபட்டு நடப்பதால் விசுவாசம் குறையும். நன்மையைச் செய்வது பலத்தைத் தரும்; தீமையோ பலவீனத்தைத் தரும்!

9.ஒருவர் மற்றவரை, சீர்திருதிருத்திக் கொள்வதே, உண்மையான உறவின் அஸ்திவாரம் ஆகும்.

10. اولئك هم المؤمنون - இறைசட்டங்கள் அனைத்தையும் நபி (ஸல்) அவர்களின் வழிமுறையில் பகிரங்கமான நிலையிலும், மறைமுகமான நிலையிலும் கடைபிடித்தால் மட்டுமே ஈமான் முழுமை பெறும்.

11. واذ يعدكم الله - இறை அடியார்கள் தமக்காக விரும்புவதை விட, அல்லாஹ் அவர்களுக்காக விரும்புவதே சிறப்பானதாக இருக்கும்.

12. இதய சுத்தியுடன் அல்லாஹ்வை அழைக்கின்றபோது, உதவி உடனே கிடைக்கும்; சத்தியம் வெல்லும்.

13. வானவர்கள் உடன் இருக்கின்ற நிலையிலும், அடியார்கள்

---

1. விபரங்களுக்கு: 05:32, 02:190

அல்லாஹ்வையே சார்ந்திருக்க வேண்டும். ஏனெனில் உதவி அல்லாஹ்விடம் இருந்தே கிடைக்கும்.

14. فلا تولوهم الادبار - யுத்தகளத்தில் புறமுதுகிட்டு ஓடுவது ஹராம்; பெரும் பாவம் ஆகும். ஆனால் திருப்பித் தாக்குவதற்காகப் பின்வாங்கலாம்.

15. அல்லாஹ்விற்கும் அவனுடைய தூதருக்கும் கட்டுப்பட்டு நடப்பதே, முஸ்லிம்களின் முதல் மூலதனம் ஆகும். இதுவே நேர்வழிக்கான வழியுமாகும்.

16. எல்லா நிலைகளிலும் அல்லாஹ்விற்கு அடிபணிந்து நடப்பதில்தான் முஸ்லிம்களுக்கு வாழ்வு இருக்கிறது.

17. எப்பொழுதும் தன் உள்ளத்தைக் கண்காணித்து வரவேண்டும்.

18. அல்லாஹ் நம்மை அதிபதி ஆக்கியுள்ள, குழந்தைகள் மற்றும் செல்வங்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகளாகும். அவைகளைக் கவனித்து எச்சரிக்கையாக இருந்திடுக!

19. அல்லாஹ்வை அஞ்சுவோருக்கு அல்லாஹ்வின் உதவியைப் பெறுவதற்குரிய சூழல்கள் நிலவும்; கண்ணியமும் சக்தியும் அருளப்படும்.

20. இந்த மார்க்கத்திற்கெதிராக சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்படும்; அல்லாஹ்வே அவைகளை உடைத்தெறிவான்; மார்க்கத்தை மேலோங்கச் செய்வான்..!

21. وما كان الله நபி (ஸல்) அவர்கள் இருக்கின்ற நிலையில், வேதனை இறக்கப்பட மாட்டாது, - என்பதே நபி (ஸல்) அவர்களின் மகத்துவம்தான்!

22. பாவமன்னிப்பை நாடிடும் சமூகத்தை அல்லாஹ் அழிக்கமாட்டான்..!

23. குப்பார்களோடு யுத்தம் புரிவதன் நோக்கம், அவர்களை அல்லாஹ்வின் வழியில் அழைப்பதே! குழப்பத்தை அழிப்பதே!! மார்க்கம் யாவும் அல்லாஹ்விற்காக ஆகுவதே!!! அவர்கள் திருந்தி வந்தால், மன்னிக்கப் படுவார்கள்.

24. இஸ்லாம், பகை மார்க்கமன்று; அமைதி மற்றும் சாந்தியைத் தருகின்ற மார்க்கமே!

25. பொதுவாக அல்லாஹ்வின் பேச்சை ஏற்பது, இறை விசுவாசத்தின் அடையாளமாகும்.

26. பத்ரு யுத்தம் நிகழ்ந்த நாள், சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்தறிவித்த நாள்; கண்ணியம் மற்றும் பாதுகாப்பைத் தந்த நாள். அதற்குப் பின் முஸ்லிம்களை கண்ணியமும் பலமும் வந்தடைந்தன..!

27. யுத்த களத்தில் முஸ்லிம்கள் காட்டிய உறுதிகுலையாமையும், அல்லாஹ்வை நினைவு கூர்ந்தமையும் இறை உதவிக்கான

காரணங்களாக அமைந்தன..!

28. ஒரு மு.ஃமின் - இறைவிசுவாசியின் செயல்பாடுகள் யாவும் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்திற்காகவே அமைந்திட வேண்டும்; முகஸ்துதி, மற்றும் பிறர் மெச்சுவதற்காக அறவே கூடாது.
29. ஷைத்தானின் சூழ்ச்சி பலமற்றது..!
30. அல்லாஹ்வின் மார்க்கத்தில் இருந்து விலகுவதும், அவனுக்கு நன்றி மறப்பதும் அவன் தந்த அருட்கொடைகளை அழிக்கும்.
31. காபிர்கள் அல்லாஹ்வின் பார்வையில் விலங்குகளைவிடக் கீழானவர்கள். ஏனெனில் அவர்கள் 'ஷரீஅத்தை' மறுத்து ஒதுக்குகிறார்கள்.
32. எவ்வளவுதான் காபிர்கள் பலமிக்கவர்களாக இருப்பினும், அல்லாஹ்வைத் தோற்கடிக்க முடியாது.., காரணம் பலத்தை வழங்குவதே அவனேயன்றோ!
33. அல்லாஹ்வின் அருள் மற்றும் அவனது உதவிகளின் மீது ஒரு மு.ஃமின் எப்போதும் உறுதியாக நம்பிக்கை கொள்ளவேண்டும்.
34. ஓர் மு.ஃமின் அல்லாஹ்வின் கயிற்றைப் பற்றிப்பிடித்து, அல்லாஹ்வின் உதவியைப் பெறுவதற்கான காரணங்களைக் கடைபிடிக்கின்றபோது, எல்லா நிலைகளிலும் அவனுக்கு அல்லாஹ் உதவி செய்கிறான்.
35. அல்லாஹ்விடம் தேவைகளை எதிர்பார்ப்பது, அடியார்களைத் தன்னிறைவு பெறச் செய்கிறது; மன உறுதியைத் தோற்றுவிக்கிறது.
36. 'ஷரீஅத்தில்' ஹிஜ்ரத் மற்றும் 'ஜிஹாத்' திற்கு முக்கிய இடமுண்டு; இவைகளின் மூலமாக அல்லாஹ் உயர்ந்த அந்தஸ்தை வழங்குகிறான்.
37. மு.ஃமின்கள் தமக்கிடையே ஒன்றிணைந்து செயல்படுதல் முக்கியமான ஓர் அடிப்படையாகும். அதன் மீதே அவர்களின் வாழ்வு அமைந்துள்ளது. இல்லையேல் குழப்பமும் கொந்தளிப்பும்தான் இருக்கும்.

## தொடர்புகள் நுட்பமான விரிவுரைகள

- 'அல் அ.ஃராபில் முந்தைய சமுதாயத்தினர் தத்தமது நபிமார்களுடன் நடந்துகொண்ட முறைகள் கூறப்பட்டுள்ளது. 'ஸூரா அல்அன்பாலில்' முஹம்மத் (ஸல்) அவர்களின் சமூகம் அவர்களுடன் நடந்துகொண்ட விதம் விவரிக்கப்படுகிறது.
- 'பத்ரு' யுத்தத்திற்குப் பிறகு, முஸ்லிம்களிடம் சில குறைகள்

வெளிப்பட்டபோது இவ்வத்தியாயத்தில் அவை குறிப்பிடப்பட்டு சரிசெய்யப்பட்டன.

- ❖ ‘‘தன் குடும்பத்தினரே தமக்குள் சன்டையிட்டுக் கொள்ள காரணமாகிறார்.. தம் உறவினர்களைக் கைதிகளாக்குகிறார்.. அவர்கள் விடுதலை பெற்றிட அவர்களிடம்கூட ‘பித்யா’ பெறுகிறார் .. இவர் நபியா? ’’ نعـــــوذ بالله من ذلك - என்றெல்லாம், குறைஷிக்-காபிர்கள் எழுப்பிய, பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு இவ்வத்தியாயத்தில் பதிலடி தரப்படுகிறது.
- ❖ இவ்வத்தியாயம் ‘பத்ரு’ப் போர் முடிந்தபின் இறங்கியதால், இதற்கு ‘அல்- பத்ரு’ என்ற பெயரும் உண்டு; அல்புர்கான் (சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரிக்கக் கூடியது) என்றும் அழைக்கப்படுகிறது. 1

**அழைப்புப் பணி, சீர்திருத்தப்பணி, மனப்பக்குவம், மற்றும் நினைவூட்டலுக்காக – சிந்திக்கவும் மனனமிடவும் உகந்த இறைவசனங்கள் மற்றும் நபிமொழி ..!**

## திருக்குர்ஆன்

8:46. இன்னும் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்படியுங்கள் - நீங்கள் கருத்து வேறுபாடு கொள்ளாதீர்கள் (அவ்வாறு கொண்டால்) கோழைகளாகி விடுவீர்கள் உங்கள் பலம் குன்றிவிடும் (துன்பங்களைச் சகித்துக் கொண்டு) நீங்கள் பொறுமையாக இருங்கள் - நிச்சயமாக அல்லாஹ் பொறுமையுடையவர்களுடன் இருக்கின்றான்.

وَأَعِدُّوا لَهُم مَّا اسْتَطَعْتُم مِّن قُوَّةٍ وَمِن رِّبَاطِ الْخَيْلِ تُرْهِبُونَ بِهِ عَدُوَّ اللَّهِ
وَعَدُوَّكُمْ وَآخَرِينَ مِن دُونِهِمْ لَا تَعْلَمُونَهُمُ اللَّهُ يَعْلَمُهُمْ وَمَا تُنفِقُوا مِن شَيْءٍ
فِي سَبِيلِ اللَّهِ يُوَفَّ إِلَيْكُمْ وَأَنتُمْ لَا تُظْلَمُونَ

8:60. அவர் (நிராகரிப்பவர்)களை எதிர்ப்பதற்காக உங்களால் இயன்ற அளவு பலத்தையும், திறமையான போர்க்

---

1. மேலதிக விபரம்: தப்ஸீர் இப்னு கஸீர் - பாகம்-4 ; பக்கம்-101

குதிரைகளையும் ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள் இதனால் நீங்கள் அல்லாஹ்வின் எதிரியையும், உங்களுடைய எதிரியையும் அச்சமடையச் செய்யலாம் அவர்கள் அல்லாத வேறு சிலரையும் (நீங்கள் அச்சமடையச் செய்யலாம்) அவர்களை நீங்கள் அறிய மாட்டீர்கள் - அல்லாஹ் அவர்களை அறிவான் அல்லாஹ்வுடைய வழியில் நீங்கள் எதைச் செலவு செய்தாலும், (அதற்கான நற்கூலி) உங்களுக்கு பூரணமாகவே வழங்கப்படும் (அதில்) உங்களுக்கு ஒரு சிறிதும் அநீதம் செய்யப்பட மாட்டாது.

## அல்ஹதீஸ்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:‘‘ எனக்குக் கட்டுப்பட்டு நடப்பவர் அல்லாஹ்விற்குக் கட்டுப்பட்டவர் ஆவார்; எனக்கு மாறுசெய்கிறவர் அல்லாஹ்விற்குக் மாறு செய்கிறவர் ஆகிறார். ‘அமீருக்’குக் கட்டுப்பட்டு நடப்பவர் அல்லாஹ்விற்குக் கட்டுப்பட்டவர் ஆவார்; ‘அமீரு’க்கு மாறுசெய்கிறவர் எனக்கு மாறு செய்கிறவர் ஆகிறார். ’’. (ஸஹீஹ் முஸ்லிம்: 1835)

# سُوْرَةُ التَّوْبَةِ

## ஸூரதுத் தவ்பா

9

இது 'மக்கீ'
ஸூரா ஆகும்.

# சில நோக்கங்கள்
## *Few Objectives*

- இந்த அத்தியாயத்தின் நோக்கம், தலைப்பிலேயே தெளிவாகிறது..அதாவது பாவமன்னிப்பு!
- இந்த ஆத்தியாயம் 'தபூக்' யுத்தம் நிகழ்ந்து 22 வருடங்கள் சென்றபின்பு, அழைப்புப் பணி மற்றும் நபித்துவத்தின் இறுதிக்கட்ட வார்த்தைகளை உள்ளடக்கியதைப் போல் இறங்கியது.1
- இவ்வத்தியாயத்தில் ஒப்பந்தங்களை முறித்த இஸ்லாத்தின் எதிரிகள், அல்லது இஸ்லாத்தின் போர்வையில், பதுங்கிய நயவஞ்சகர்களின் முகத்திரை கிழிக்கப்படுகிறது.2
- யுத்தம் பற்றிய அறிவிப்பு வெளியான பின் முஸ்லிம்களின் பதில்-வினை மற்றும் அவர்களில் பின்தங்கியவர்களுக்கான எச்சரிக்கை!3
- சில ஸஹாபாக்கள், இந்த ஸூராவை 'ஸூரதுல் பாளிஹஹ்' - நயவஞ்சகர்களின் 'குட்டு உடைத்த' அத்தியாயம் என்றழைத்தனர்.
- பஸ்மலஹ்' இன்றி ஆரம்பமாகும் அத்தியாயம் இது.., அதற்காக 14 காரணங்கள் கூறப்பட்டுள்ளன. ''பஸ்மலஹ்வில் பாதுகாப்பு உள்ளது. நயவஞ்சகர்கள் குறித்து அருளப்பட்ட இவ்வத்தியாயம் அவர்களுக்கான தண்டனை பற்றிய செய்தியைத் தாங்கி வந்துள்ளது. எனவே 'ஸூரா அத் தவ்பா' வில் பிஸ்மில்லா இல்லை'' என அலீ (ரலி) சொல்கிறார்கள்.4 ஓர் எளிய காரணம் இதோ:- நபி (ஸல்) அவர்கள் இந்த ஸூராவின் ஆரம்பத்தில், பிஸ்மில்லாஹ் எழுதச் சொல்லாததால், ஸஹாபாக்கள் எழுதவில்லை! அதற்குக் கட்டுப்பட்டு, நாமும் இவ்விடத்தில், பிஸ்மில்லாஹ் சொல்லாதிருப்போம். அல்லாஹ் மிக அறிந்தவன்! 'அல்அன்பால்' மற்றும் 'அத்தவ்பா' அத்தியாயங்களின் கருத்துக்கள் ஒன்றே! எனவே பிரித்தல் மற்றும் 'பஸ்மலஹ்' விற்கு அவசியமில்லை. அதாவது அத்தவ்பா அத்தியாயம், ஸூரா அல்அன்பாலுடைய இரண்டாம் பாகம்போல் உள்ளது. அல்லாஹ்வே மிக அறிந்தவன்!

---

1. தப்ஸீர் இப்னு கஸீர் பாகம்-4; பக்கம்-101
2. தப்ஸீர் குர்துபீ- பாகம்-8
3. தப்ஸீர் குர்துபீ பாகம்-8 ; பக்-72
4. தப்ஸீர் குர்துபீ பாகம் - 8; பக்-5

❖ இந்த அத்தியாயத்திற்கு 14 பெயர்கள் உள்ளன. அவை. 1

براءة ، التوبة ، المخزية ، الفاضحة ، الكاشفة ، المنكلة ، العذاب

المدمدمة ، المقشقشة ، المبعثرة ، المشردة ، المثيرة ، والحافرة

## சில தலைப்புகள
## *Few Topics*

1. நபி (ஸல்) அவர்கள் காலத்திய இணைவைப்பாளர்களுடன் (முஷ்ரிக்குகள்) மேற்கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளை விட்டுவிலகியது குறித்தும் அவர்களுடனான தொடர்புகள் குறித்தும் விபரங்கள்! (1-6)
2. இணைவைப்பாளர்களின் தன்மைகள், மு.ஃமின்களின் விஷயங்களில் அவர்கள் நடந்து கொண்ட விதம் மற்றும் சத்தியத்தை நிலைநாட்ட, முஸ்லிம்கள் எதிரிகளுடன் போர் செய்வதற்கான உத்தரவு! (7-15)
3. அறப்போருக்கான தூண்டுதல் (16)
4. இறை இல்லங்களைக் கட்டுவதும் அவைகளை உயிரோட்டமானவைகளாகக் கட்டமைப்பதும் முஸ்லிம்களின் பணியாகும் (17-18)
5. இணைவைப்பாளர்களின் உறுதியான எதிர்பார்ப்பு, மறுக்கப்படுகிறது. (19)
6. இறை விசுவாசமிக்க ‘முஜாஹித்’ களின் தனிச்சிறப்பு (22-20)
7. மார்க்க விரோதிகளோடு நட்பு பாராட்டத் தடை.., நெருங்கிய உறவினரே எனினும் சரியே!(23-24)
8. ‘ஹுனைன்’ யுத்தத்தில் அல்லாஹ் மு.ஃமின்களுக்கு விஷேசமாக உதவி செய்தான்! (25-27)
9. மஸ்ஜிதுல் ஹராமில், இணை வைப்பாளர்கள் நுழையத் தடை! (28)
10. சத்தியத்தை நிலை நிறுத்த, எதிரிகளுடன் போரிடுவதற்கான அழைப்பு!!(29)
11. ‘அல்லாஹு தஆலா விற்குக் குழந்தைகள் உள்ளனர்’, என்கிற இணைவைப்பாளர் - களின் தவறான கொள்கை..!(30-33)
12. யூதர்கள் மற்றும் கிறித்தவர்களின் குருமார்கள், மக்களின் பணத்தைத் தவறாகச் சாப்பிட்டார்கள்.(34-35)

---

1. தப்ஸீர் அல் மவழூஈ - ஜாமிஅதுஷ் ஷாரிகஹ்

13. கண்ணியத்திற்குரிய மாதங்களைக் காபிர்கள் கையாண்ட விதம்.(36-37)
14. அநீதிக்காக போராடவும் தற்காப்பிற்காகவும், ஜிஹாத் செய்திட உத்தரவு மற்றும் இறைத்தூதருக்குக் கிட்டிய அல்லாஹ்வின் உதவி! (38-59)
15. ஜகாத் பெறத் தகுதியானவர்கள். (60)
16. நயவஞ்சகர்களின் (முனாபிக்குகள்) தன்மைகளும் அவர்களுக்கான தண்டனைகளும் மற்றும் விசுவாசிகளின் தன்மைகளும் அவர்கள் பெறவிருக்கின்ற நற்கூலிகளும். (61-72)
17. ‘குப்பார்கள்’ மற்றும் ‘முனாபிக்குகள்’ உடன் ‘ஜிஹாத்’ செய்வதற்கான உத்தரவு! (73)
18. நயவஞ்சகர்களின் (முனாபிக்குகள்) தன்மைகள் மற்றும் அவர்களுக்கான தண்டனை விவரம்! (74-87)
19. விசுவாசிகள் மற்றும் நபி (ஸல்) அவர்களின் ‘ஜிஹாத்’ அவர்கள் பெறவிருக்கின்ற நற்கூலிகள் பற்றிய விபரம். (88-89)
20. யுத்தத்தில் பங்கெடுக்காதிருக்கக் காரணம் கூறியவர்களின் வகைகள் மற்றும் சட்டம். (90-93)
21. முனாபிக்குகளின் பொய் வெளிப்பட்டது..! (94-96)
22. சில கிராமவாசிகள் மற்றும் காபிர்கள் தமது நிராகரிப்பில் மிகக் கடுமையாக உள்ளனர். (97-98)
23. (அன்றைய) கிராமத்து மு.ஃ.மின்களின் விபரம். (99)
24. நகர்ப்புற மு.ஃ.மின்களின் விபரம் (100)
25. மதீனத்து முனாபிக்குகள் விபரம். (101-102)
26. ஸதகஹ், தவ்பஹ் மற்றும் இக்லாஸ் - சிறப்புகள். (103-106)
27. முஸ்லிம்கள் நிறுவிய மஸ்ஜித் ‘குபா’, முனாபிக்குகள் கண்ட மஸ்ஜித் ‘ளிரார்’ விபரம் மற்றும் அவைகளுக்கிடையே உள்ள வேறுபாடு. (107-110)
28. பயனுள்ள வியாபாரம் மற்றும் அதன் தன்மைகள். (111-112)
29. ‘இணைவைப்பாளர்’ (முஷ்ரிக்) களுக்காக பாவமன்னிப்பு கேட்பதற்கான தடையும், இப்றாஹீம் (அலை) தன் தந்தைக்காக பாவமன்னிப்பு கேட்டதன் காரணமும். (113-116)
30. ‘தபூக்’யுத்த வாசிகளுக்காக அல்லாஹ் அருளிய மன்னிப்பு – விபரம். (117-119)
31. ரஸூல் (ஸல்) அவர்களோடு ‘ஜிஹாத்’ செய்த மதீனத்து மக்களின் சிறப்பு மற்றும் அவர்களின் கல்வி குறித்த விபரம். (120-123)
32. அத்தியாயங்கள அருளப்பட்ட வேளைகளில் மு.ஃ.மின்கள் கண்ட நிலைப்பாடு.(124)

33. அத்தியாயங்கள் அருளப்பட்ட வேளைகளில் முனாபிக்குகள் மேற்கொண்ட நிலைப்பாடு. (125-127)
34. இரஸூல் (ஸல்) அவர்களின் சில சிறப்புக்கள். (128-129)

## சில பாடங்கள்
## *Few Lessons*

1. மாற்று மதத்தவர்களுடன் தொடர்பு கொள்வதற்கான அம்சங்கள், அவர்களோடு பழகுவதற்கான வழிமுறைகள்..!
2. அல் அன்பால் கூறும் ஒரு வழிமுறை இதோ:- 'அஸ்ஸலாமுல் முஸல்லஹ்' (ஆயுத-அமைதி) இன்றைய சொல்வழக்கில் peace keeping force (அமைதிப் பாதுகாப்புப் படை) எனப்படுகிறது. இஸ்லாத்தைப் பொறுத்தவரை சுயப் பாதுகாப்பு, அநீதியை முறியடிப்பது, மற்றும் சாந்தியை நிலை நாட்டுதல் ஆகியவைகளில் மட்டுமே பலத்தைப் பிரயோகம் செய்யலாம். அப்பாவிகளை வதைப்பதற்கோ – தீவிரவாத காரியங்களுக்கோ அல்ல..![1]
3. குறைஷிக்-காபிர்கள் தகுதியைத் தவறவிட்டதால், அவர்களின் இடத்தை நிரப்ப (replace) நேரம் வந்துவிட்டது. முஸ்லிம்களே! யாரையாவது, அல்லாஹ் மற்றும் அவனது தூதரை விட – அவனது வழியில் அறப் போர் புரிவதை விட அதிகம் நேசித்தால், பிறகு அழிவு காலம் ஆரம்பமாகிவிடும். (9:24)
4. நமக்கு அல்லாஹ்வின் உதவியும் இஸ்லாமும் அவசியமானவையாகும். அல்லாஹ்விற்கு எவருடைய உதவியும் தேவையில்லை..! இந்த இஸ்லாம் மார்க்கம் இல்லங்கள்தோறும் உள்ளங்கள்தோறும் நுழைந்தே தீரும்..!!
5. பாவமன்னிப்பிற்கான வாயில் திறந்திருக்கிறது.., என அறிவிக்கிறது இவ்வத்தியாயம்.
6. 'இவ்வத்தியாயம் இறங்கியபின் முஷ்ரிக்குகள் ஹரம் (புனிதப்) பகுதியில் ஓருநாள் கூட தங்குதல் கூடாது'. - இந்த சட்டத்தை அலி (ரலி) அவர்கள் படித்துக்காட்டி அறிவித்தார்கள்.
7. தேவையின் நிமித்தம் மாற்று மதத்தவர்களோர்டு ஒப்பந்தங்கள் போட்டுக் கொண்டால் குற்றமாகாது.
8. ஏதேனும் ஒப்பந்தங்கள் முறிக்கப்பட்டால், அன்றைய ஆட்சியாளர் போர்ப் பிரகடனம் செய்யலாம்; முஸ்லிம்களில் யாரேனும் பாதிக்கப்பட்டால் அது மோசடியாகவும்,

1. ஆதிக விபரங்களுக்கு வசனங்கள் -2:190, 5:32

ஏமாற்றுதலாகவும் கருதப்படும்.

9. நான்கு மாதங்கள் வரை மக்காவில் தங்கிக் கொள்ள முஷ்ரிக்குகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இதற்கு பலஹீனம் காரணமன்று; அவர்கள் 'தவ்பா' செய்து திருந்துவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதே இதன் காரணம் ஆகும்.

10. முஸ்லிம்கள் யாவரும் சகோதரர்களே! எனவே தமக்கிடையே அவர்கள், மென்மை மற்றும் சகோதரத்துவத்தைக் கடைபிடித்திடுக!! யாரேனும் சிரமத்தில் சிக்குண்டால் உதவிடுக!!!

11. கண்ணியத்திற்குரிய மாதங்கள் (أشهر الحرم) தீர்மானிக்கப்பட்டுள்ளன. அவை துல்க.்.தஹ், துல்ஹிஜ்ஜஹ், முஹர்ரம் மற்றும் இரஜப் ஆகியன. எனவே இம்மாதங்களில் போரைத் துவக்குவது ஹராம் ஆகும்.

12. அல்லாஹு தஆலா அடியார்களை, வெற்றி, தோல்வி, பலம், மற்றும் இழிவு போன்றவற்றால் சோதிப்பது அவனுடைய ஞானத்தில் உள்ளதாகும். அப்படி இல்லாவிட்டால், - எப்போதுமே வெற்றியும் உதவியும் கிட்டினால் அவன் அகங்காரமாய் அநீதமிழைப்பவனாய் ஆகிவிடுவான்..!

13. வேதமளிக்கப்பட்டவர்கள், முஹம்மத் (ஸல்) அவர்களின் 'ரிஸாலத்' - நபித்துவத்தை மறுக்கிறார்கள்.. மேலும் நபி மஸீஹ் (அலை) மற்றும் நபி உஜைர் (அலை) ஆகியோருக்கு 'உலூஹிய்யத்' தைக் கற்பிக்கிறார்கள்.

14. சூழ்நிலையைக் கருத்தில் கொள்ளாமல் பொருளாதாரத்தைக் குவிப்பதற்குத் தடை போடப்பட்டுள்ளது. ஏனெனில் பொதுவான சூழ்நிலையில் அதனால் கேடு உண்டாகும்.

15. மாதங்களின் எண்ணிக்கை முதல் நாளில் இருந்து அல்லாஹ்விடம் 12 ஆகும்.

16. மக்காவில் ஜிஹாத் செய்வதற்கு, நபி (ஸல்) அவர்கள் உள்பட எவருக்கும் அனுமதி இல்லை. الا ماشاء الله

17. ஜிஹாத் தீவிரவாதத்திற்கு நேர்எதிரானதர்கும்; அல்லாஹ்வின் வார்த்தையை மேலோங்கச் செய்தல் - அநீதியைத் தடுத்தல் - எளியவர்களுக்கு உதவி புரிவதற்காகவே ஜிஹாத் கடமையாக்கப் பட்டது.

18. ஜிஹாதைக் கைவிடுவதால், சமுதாயத்தில் பெரும் பாதிப்புகள் ஏற்படும்; முதலாவதாக, எதிரிகள், முஸ்லிம்களின் இருப்பிடங்களைக் கைப்பற்றுவர்; அவர்களின் சிறப்புகளைச் சிதைப்பர்; இரத்தத்தை ஓட்டுவர். மேலும் முஸ்லிம்கள் ஜிஹாதைக் கைவிடுவதன் மூலம், தாம் அடையவிருக்கும் அல்லாஹு தஆலாவின் பெரும் நன்மையை இழந்து விடுவர்! பிறகு உலகில் அநியாயத்தைத் தடுக்க எந்த ஏற்பாடும் இல்லாது

போகும்!!.

19. 'முனாபிக்' களோடு 'அல்வலா வல்பரா.' (ஆதரவு மற்றும் அநாதரவு) என்கிற விதியின் படி வெறுப்பை வெளிப்படுத்துதல், அவசியமானதாகும். அவ்லியாவுர்-ரஹ்மான் (இறை நேசர்) களோடு, நட்பாக இருப்பதும், அவ்லியாவுஷ்-ஷைதானை (ஷைத்தானின் நண்பர்களை) விட்டு விலகி இருப்பதும், கட்டாயமானதாகும்.
20. சில ஊர்கள் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் இருப்பவர்கள் குப்ரு - இறை நிராகரிப்பு மற்றும் நிபாக் - நயவஞ்சகத்தில் கடுமையானவர்களாக உள்ளார்கள்..., காரணம் அவர்களின் இதயமும் இயல்பும் கடினமாக இருப்பதே! மேலும் அவர்கள் கல்வி மற்றும் அறிவில் இருந்து தூரமாக உள்ளனர்.
21. முஸ்லிம்கள் தமக்குள் ஒருவருக்கொருவர் உதவிசெய்வோராய் திகழுக! தத்தமது சிந்தனைப் போக்குகள் மாறுபட்டு இறுப்பினும் சரியே.., (முன் சென்ற சான்றோர்களின் நெறி நின்று அவர்களின் இனிய வாழ்வை வாழ்ந்திடுக!!)
22. விசுவாசிகள் இப்படிப் போதிக்கப்படுகிறார்கள்: ''எதிரிகள் அவர்களிலேயே இருப்பார்கள்; அவர்களுக்கு இடையே இருக்கவும் செய்கிறார்கள்".
23. 'தபூக்' யுத்தம், தந்த ஒரு பாடம் இதோ: 'மக்கள் கஷ்ட காலங்களில் பொறுமை காக்கின்றபோது, அவர்களின் தன்மையும் உள்ரங்கமும் வெளிப்படுகிறது'.
24. உதவி வருவது, அல்லாஹ்விடம் இருந்தே..! இருப்பினும், மனோ-இச்சையை ஒடுக்கிட - ஜிஹாதின் கஷ்டங்களைச் சகித்திட - பொறுமை காத்திட - தூரங்களைக் கணித்துக் கடந்திட .., 'தபூக்' யுத்தம் பாடம் நடத்துகிறது. காரண காரியங்கள் ஒரு பக்கம் இருக்கவே இருக்கிறது என்றாலும், உண்மையான உதவியும்.. ஆதரவும்.., காரண கர்த்தா அதாவது அல்லாஹ்விடமிருந்தே கிடைக்கிறது.

    ''நாடும் காரியத்தில், கர்த்தாவை வேண்டு!.. பணிந்து, பயந்து புகழ்ந்து வேண்டு!!.. பிறர் முன் கையை ஏந்துவதேனோ!.. 'ரப்பின்' அடிமையே 'ரப்பி'டம் வேண்டு!!"
25. நயவஞ்சகர்கள் குறித்து, எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.. அவர்களிடம் கவனமாக இருக்கவும் படையில் இவர்களைக் களையெடுக்கவும் கட்டளை இடப்பட்டிருக்கிறது.

## தொடர்பு நுட்பமான விரிவுரைகள்

- அல் அன்பால் அத்தியாயம், ஸஹாபாக்கள் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள (Self Development) உத்தரவிடுகிறது.. அத் தவ்பா அத்தியாயமோ, வேதமளிக்கப்பட்டவர்கள், குரைஷிக்-காபிர்கள் மற்றும் நபி (ஸல்) அவர்களுக்கும், அவர்களின் தோழர்களுக்கும் பகைவர்களாய்த் திகழ்ந்தோர் என அனைவருக்கும் எச்சரிக்கையைக் (Warning) கொண்டுள்ளது.
- ஸூரா அல் அன்பாலுக்குப் பின் இடம்பெறும் அத்தியாயம் அத் தவ்பா வில், நபி (ஸல்) அவர்கள் கலந்துகொண்ட இறுதி யுத்தம் ‘தபூக்’ பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. முந்தைய அத்தியாயம் அல் அன்பாலில் முதலாவது போரைப் பற்றிப் பேசப்படுகிறது என்பது ஒரு சிறப்பம்சாகும்.
- முஸ்லிம்கள் இஸ்லாத்தை அரபு தீபகற்பத்திற்கப்பால் எடுத்துச் செல்லும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்த சமயத்தில்தான் இவ்வத்தியாயம் இறங்கியது.

அழைப்புப் பணி, சீர்திருத்தப்பணி, மனப்பக்குவம், மற்றும் நினைவூட்டலுக்காக – சிந்திக்கவும் மனனமிடவும் உகந்த இறைவசனங்கள் மற்றும் நபிமொழி ..!

### திருக்குர்ஆன்

9:24 قُلْ إِن كَانَ آبَاؤُكُمْ وَأَبْنَاؤُكُمْ وَإِخْوَانُكُمْ وَأَزْوَاجُكُمْ وَعَشِيرَتُكُمْ وَأَمْوَالٌ اقْتَرَفْتُمُوهَا وَتِجَارَةٌ
تَخْشَوْنَ كَسَادَهَا وَمَسَاكِنُ تَرْضَوْنَهَا أَحَبَّ إِلَيْكُم مِّنَ اللَّهِ وَرَسُولِهِ وَجِهَادٍ فِي سَبِيلِهِ فَتَرَبَّصُوا
حَتَّىٰ يَأْتِيَ اللَّهُ بِأَمْرِهِ ۗ وَاللَّهُ لَا يَهْدِي الْقَوْمَ الْفَاسِقِينَ

9:24. (நபியே!) நீர் கூறும்: உங்களுடைய தந்தைமார்களும், உங்களுடைய பிள்ளைகளும், உங்களுடைய சகோதரர்களும், உங்களுடைய மனைவிமார்களும், உங்களுடைய

குடும்பத்தார்களும், நீங்கள் திரட்டிய செல்வங்களும், நஷ்டம் (எங்கே) ஏற்பட்டு விடுமோ என்று நீங்கள் அஞ்சுகின்ற (உங்கள்) வியாபாரமும், நீங்கள் விருப்பத்துடன் வசிக்கும் வீடுகளும், அல்லாஹ்வையும் அவன் தூதரையும், அவனுடைய வழியில் அறப்போர் புரிவதையும் விட உங்களுக்கு பிரியமானவையாக இருக்குமானால், அல்லாஹ் அவனுடைய கட்டளையை (வேதனையை)க் கொண்டுவருவதை எதிர்பார்த்து இருங்கள் - அல்லாஹ் பாவிகளை நேர்வழியில் செலுத்துவதில்லை.

لَقَدْ جَاءَكُمْ رَسُولٌ مِّنْ أَنفُسِكُمْ عَزِيزٌ عَلَيْهِ مَا عَنِتُّمْ حَرِيصٌ عَلَيْكُم بِالْمُؤْمِنِينَ رَءُوفٌ رَّحِيمٌ 9:128

9:128. (மு.்.மின்களே!) நிச்சயமாக உங்களிலிருந்தே ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கின்றார் நீங்கள் துன்பத்திற்குள்ளாகி விட்டால், அது அவருக்கு மிக்க வருத்தத்தைக் கொடுக்கின்றது அன்றி, உங்(கள் நன்மை)களையே அவர் பெரிதும் விரும்புகிறார். இன்னும் மு.்.மின்கள் மீது மிக்க கருணையும் கிருபையும் உடையவராக இருக்கின்றார்.

## அல்ஹதீஸ்

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘உங்களில் ஒருவர் தன் தந்தை, மகன் மற்றும் மனிதர் அனைவரையும் விட அதிகமாக என்னை நேசிக்காதவரை (முழுமையான) விசுவாசியாக ஆக மாட்டார் ’’. (அல் புகாரீ : 15)

# سُوْرَةُيُونُسْ

# ஸூரா யூனுஸ்
# (அலை)

**10**

இது ‘மக்கீ’
ஸூரா ஆகும்.

## சில நோக்கங்கள்
## *Few Objectives*

- ‘அல்லாஹு தஆலா நீதியாளன் - ஞானமிக்கவன் - தன் அடியார்களுக்கு ஒருபோதும் அநீதி இழைக்கமாட்டான்’- என இவ்வத்தியாயத்தில் எடுத்துக்காட்டப்படுகிறது.
- இந்த ஸூரர்விற்கு யூனுஸ் எனப் பெயர் வரக் காரணம்: இதில் யூனுஸ் (அலை) குறித்துக் கூறப்பட்டுள்ளது.
- இந்த அத்தியாயத்தில், தவ்ஹீத் (ஏகத்துவம்) – ரிஸாலத் (தூதுத்துவம்) – ஆகிரத் (மறுமை) பற்றிய சந்தேகங்கள் தீர்க்கப்படுகின்றன.

## சில தலைப்புகள்
## *Few Topics*

1. நபி (ஸல்) அவர்களின் மானுட அம்சம் மற்றும் அவர்களின் நபித்துவ அம்சம் பற்றிய விபரமும் அன்றைய இணைவைப்பாளர்கள் இதில் மேற்கொண்ட நிலைபாடும்! (1-2)
2. அல்லாஹ்வின் மகத்துவம், வல்லமை மற்றும் ஏகத்துவத்திற்கான ஆதாரங்கள். (3-6)
3. மறுமையை மறுத்தவர்கள் மற்றும் அவர்களின் முடிவு பற்றிய விபரம். (7-8)
4. மு.ஃ.மின்களின் தன்மைகளும் அவர்கள் பெறவிருக்கின்ற கூலியும். (9-10)
5. பெரும்பான்மை மக்களுடைய குணபாடுகளின் விபரம். (11-12)
6. அநியாயம் செய்வோரை அழிப்பதிலும், மு.ஃ.மின்களுக்கு ஆட்சியைக் கொடுப்பதிலும், அல்லாஹ்வின் வழிமுறை..! (13-14)
7. திருக்குர்ஆன் அல்லாஹ்விடமிருந்து வந்திருக்கின்ற இறைசெய்தியாகும். அதில் மாற்றம் செய்திட இறைத்தூதருக்கு அனுமதி கிடையாது. (15-17)
8. இணைவைப்பாளர்களுடைய அறியாமையும், அதற்கான மறுப்பும். (18-20)
9. இன்பத்திலும் துன்பத்திலும் மக்களின் மன நிலைகள். (21-23)
10. உலக வாழ்க்கைக்கு உதாரணம் தரப்பட்டிருக்கின்றது. (24)
11. அல்லாஹ்வின் புறத்தில் இருந்து கிடைக்கின்ற நேர்வழியும், நேர்வழியில் நிற்போர் பெறப் போகின்ற நற்கூலியும். (25-26)

12. மறுமையில் அவிசுவாசிகளும் இணைவைப்பாளர்களும் அடைகின்ற தண்டனை. (27-30)
13. முஷ்ரிக்குகள் - இணைவைப்பாளர்களிடம் .., ஆதாரம் நிலைநாட்டப்படுகிறது; ஏகத்துவம் நிரூபிக்கப்படுகிறது; இணைவைப்பு ரத்து செய்யப்படுகிறது. (31-36)
14. திருக்குர்ஆனைப் போன்றதொரு நூலைக் கொண்டு வர, இணைவைப்பாளர்களுக்கு, சவால்..! (37-44)
15. இணைவைப்பாளர்களுக்கு, மறுமை நாளில் எழுப்பப்படுவது மற்றும் பொய்ப்பிப்பதால் ஏற்படும் விளைவு குறித்துக் கூறப்படுகிறது. (45-56)
16. திருக்குர்ஆன் மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றிய விபரம். (57-58)
17. இணைவைப்பாளர் - 'முஷ்ரிக்' - களின் பொய்யும் அதற்குரிய பதிலும். (59-60)
18. அல்லாஹ் அனைத்தையும் சூழ்ந்தறிகிறான். (61)
19. அல்லாஹ்வின் நண்பர்கள் யார்? அவர்களுக்குக் கிடைக்கவிருக்கின்ற கூலி என்ன? (62-64)
20. இணைவைப்பாளர் - 'முஷ்ரிக்' - களின் தவறான கொள்கையும் மறுப்பும். (65-70)
21. நூஹ் (அலை) அவர்களின் சரித்திரம். (71-74)
22. மூஸா (அலை) அவர்களின் சரித்திரம்; பிர்அவ்ன் மற்றும் அவனுடைய படையிலிருந்தோர் அனைவருக்கும் ஏற்பட்ட கதி. (75-93)
23. திருக்குர்ஆன் சத்திய வேதம் ஆகும். இதற்கு மாறுசெய்வோருக்கான எச்சரிக்கை! (94-97)
24. யூனுஸ் (அலை) மற்றும் அவர்களின் சமுதாய சரித்திரம். (98)
25. படைப்புகளில் அல்லாஹ்வின் நாட்டமே, கோலோச்சும். (99-100)
26. சத்தியத்தைச் சென்றடைய, சிந்திக்கின்ற தன்மை பயிற்றுவிக்கப்படுகிறது. (101-102)
27. இரஸூல்மார்களோடு முஃமின்கள் கண்ட வெற்றி. (103)
28. வழிபாடு மற்றும் கொள்கையிலே, ஏகத்துவம். (104-107)
29. இறைத் தூதர் மற்றும் இதர மக்கள் யாவருக்கும், 'இஸ்லாம் மட்டுமே சத்திய மார்க்கம்! இதைப் பின்பற்றுவது கட்டாயம்!!' என்கிற அல்லாஹ்வின் வழிகாட்டுதல். (108-109)

# சில பாடங்கள்
## *Few Lessons*

1. இந்த அத்தியாயத்தில், மூன்று நபிமார்கள் அல்லாஹ்வின் மீது கொண்டிருந்த உறுதியான நம்பிக்கை குறித்த நிகழ்வுகள், கூறப்படுகின்றன.. நூஹ் (அலை) - வசனம் 71 மூஸா (அலை) - வசனம் 84 யூனுஸ் (அலை) - வசனம் 98 .
2. திருக்குர்ஆன் விண்ணில் இருந்து, படைப்புகளின் கர்த்தாவால் அருளப்பட்ட, வேதநூலாகும். அவ்விறைவன், இம்மை மறுமை இரண்டின் தேவைகளையும் அறிகின்றவன்.!
3. நபி (ஸல்) அவர்களின் நபித்துவம், மக்கள் யாவருக்கும் உரியதாகும்.., அவர்களைத் தூதராகத் தேர்ந்தெடுக்கக் காரணம், அவர்களை அணுகி மார்க்கச் சட்டங்களை எளிதாக விளங்கிடும் வகையில் நபி (ஸல்) அவர்கள், மற்றவர்களால் அறியப்பட்டிருந்தார்கள்.
4. நபித்துவத்திற்காக ஒரு மனிதர் தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம், மனித சமூகம் கௌரவிக்கப்பட்டுள்ளது; இதற்குத் தகுதிவாய்ந்த சமூகம் என்றும் காட்டப்படுகிறது.
5. நபித்துவத்திற்காக, மக்கள் வைத்திருக்கின்ற அளவுகோல்கள் அனைத்தும், அர்த்தமற்றவை ஆகும். அல்லாஹ், தான் நாடுவோரையே நபியாகத் தேர்ந்தெடுக்கிறான்.
6. இறை-தண்டனை குறித்து எச்சரிப்பதும், சுவனம் குறித்து நற்செய்தி தருவதும்தான், நபிமார்களின் பணியாகும்.
7. முழுமையான சக்தி கொண்டவன் (அதாவது வணக்க – வழிபாட்டுக்கு உரியவன்) அல்லாஹ் மட்டுமே ! என்கிற கொள்கை நிரூபிக்கப்படுகிறது.. அனைத்து சட்டங்களும், அவனிடமிருந்தே பெறப்படுகின்றன !! யாவற்றையும் படைத்தவனும் அவனே !!!
8. மறுமை நாளில், சிபாரிசு உண்டு.., இரஹ்மான் அனுமதிப்போரே சிபாரிசு செய்ய இயலும்; மக்களால் நம்பப் படுகிறவர்கள் எல்லாம், சிபாரிசு செய்ய இயலாது!.
9. இந்த வசனங்களின் மூலம், பலனடைவோர், இறையச்சமும் பயபக்தியும் கொண்டு, அவ்வசனங்களின் படிப்பினைகளைச், சிந்தித்து-சீர்தூக்கிப் பார்க்கிறவர்கள் மட்டுமே!!
10. நாத்திகர்கள், மற்றும் அடம்பிடிப்போருக்கு, ‘அவர்கள் செல்லுமிடம் நரகமே’ என்கிற எச்சரிக்கை.. ஏனென்றால் அவர்கள் அல்லாஹ்வை மறுக்கிறார்கள்; மாறு செய்கிறார்கள்; பொய்ப்பிக்கவும் செய்கிறார்கள். அல்லாஹு தஆலா ,

அவர்களின் நான்கு தன்மைகளை, எடுத்துக்காட்டுகிறான்.. அல்லாஹ்வைச் சந்திக்கின்ற எண்ணமே இருப்பதில்லை.. உலக வாழ்விலே திருப்தி.. அதில் மூழ்கிக் கிடத்தல்.. அல்லாஹ்வின் வசனங்களில் அலட்சியம்.

11. எந்தவொரு செயலையும் துவக்குவதற்கு முன், (بسم الله) அல்லாஹ்வின் பெயர் கூறுவதால் அல்லாஹ் மகிழ்ச்சி அடைகிறான்.

12. பிரார்த்தனை செய்வோர், இறுதியில் அல்லாஹ்வைப் புகழுதல் அவசியமாகும்.

13. தமது தவறுகளுக்காக, பிராயச்சித்தம் தேடிட - தமது அலட்சியப்போக்கில் இருந்து விடுபட.., காபிர்களைத் தண்டித்திடாமல், அல்லாஹ் அவர்களுக்கு அவகாசம் தருகிறான்.

14. நல்லவைகளை அடைவதில் அவசரம்.. துன்ப வேளைகளில் அதிகமாக மரணம் பற்றிய எண்ணம்.. இவை, பொதுவாக மனிதனின் இயல்பான தன்மை ஆகும்.

15. துஆ – நிறைவேறாத போது, நிராசையடையக் கூடாது.. அல்லாஹ்வின் பார்வையில், நன்மை, நாம் அறியாத மற்றொன்றில் இருக்கலாம்.

16. ஒரு காபிருக்குக் கஷ்டம் வந்தால், அது அவருக்கு இழிவை உண்டாக்குகிறது; மு.ஃமினுக்கோ, படைத்தவனோடு நெருக்கத்தை ஏற்படுத்துகிறது.. துஆ – வை அதிகப்படுத்துகிறது!

17. முந்தைய சமுதாய மக்கள், தாம் மேற்கொண்ட அநியாயம், ஷிர்க், குப்ர், மற்றும் அக்கிரமத்தால், அழிக்கப்பட்டார்கள்.

18. இப்புவியில் 'கிலாபத்' - இஸ்லாமிய ஆட்சி, வெளிப்படையான ஈமான் மற்றும் நல்லறங்கள் என்கிற நிபந்தனையின் அடிப்படையில் கிட்டுகிறது. அதிகாரத்தைத் தந்தபின்பு, அவர் நன்மை செய்கிறாரா?! அல்லது தீமைபுரிகிறாரா?! என அல்லாஹ் கவனிக்கிறான். பூமியில் 'கிலாபத்தை' நிறுவ வேண்டும் என, அல்லாஹ், உத்தரவிடவில்லை! வாழ்வின் நோக்கமும் அதுவன்று!! கிலாபத் - அது ஒரு அன்பளிப்பு! வணக்கத்தை நிறைவேற்றிட, ஒரு துணைச் சாதனம்!!. முழுமையான ஈமான் மற்றும் நல்ல அமலுக்காக, வழங்கப்படுகின்ற பரிசுதான் – கிலாபத் ஆகும். (24:55)

19. திருக்குர்ஆனைச் சிந்தித்துப்பார்! அதன் மூலம் படிப்பினை பெற்றிடு!! என அல்லாஹு தஆலா, மக்களுக்கு அழைப்பு விடுக்கிறான்.

20. இணைவைப்பாளர்களின் தெய்வங்கள், தோற்றமே பெறாத நிலையில், 'அவை தமக்காக சிபாரிசு செய்யும்' என்ற

அவர்களின் வாதம், முறியடிக்கப் படுகிறது. அவை தோற்றம் பெற்றாலும், அல்லாஹ்வின் முன்னால் எதையும் செய்ய, முடியாதவை !!

21. அரபியர்களிடையே, நபி இப்றாஹீம் (அலை), இஸ்மாயீல் (அலை) காலம் வரை, இணைவைப்பே இல்லாதிருந்தது! அம்ர் பின் லுஹை என்பவனே அங்கு சிலைகளைக் கொண்டுவந்து, சிலைவழிபாட்டைத் தோற்றுவித்தான்.!!

22. 'ஷிர்க்' - இணைவைப்பால்தான் (இனப்)பிரிவினையும், (வர்க்க)முரண்பாடுகளும் தோன்றுகின்றன; ஏகத்துவக் கொள்கையால் அல்ல..!

23. மறைவான ஞானம், الغيب அல்லாஹ்விடம் மட்டுமே உள்ளது. ஆதாரம் நிலை நாட்டப்படுவதற்காக, அதில் சிலவற்றை, சிலருக்கு.. அதுவும் நபிமார்களுக்கே.. அல்லாஹ் அறிவித்துக் கொடுக்கிறான்..!

24. நன்மை மற்றும் நல்லருளை அல்லாஹ்வின்பால் சாட்டுவதும், தீய மற்றும் மோசமானவை நிகழும்போது, அல்லாஹ்வின்பால் சாட்டாதிருப்பதும், நபிமார்கள் மேற்கொண்ட நெறியாகும்; உண்மையில் நன்மையோ தீமையோ, எதுவாக இருப்பினும், அல்லாஹ்வின் சக்தி மற்றும் அவன் நாட்டத்தினால்தான் நடைபெறுகின்றன.

25. அடியார்கள் (துன்பவேளைகளில்) மனதை ஒருமுகப்படுத்தி, ஓரிறைவனை மட்டும் அழைத்துப் பிரார்த்திப்பது, 'ஏகத்துவம் இயல்பானது; 'ஷிர்க்' செயற்கையானது' என்பதை எடுத்துக்காட்டுகிறது.!

26. மக்கள், ஈமான் மற்றும் நல்லமல்கள் மூலமாக சுவனத்தில் நுழைந்திட, அல்லாஹ் அனைத்து மக்களையும், சுவர்க்கம் மற்றும் நிரந்தர வெற்றியை நோக்கி அழைக்கிறான்..!

27. சொர்க்கம், மனச்சாந்தி பெறுகின்ற இல்லம்.. அங்கே கவலையுமில்லை; அபாயமும் இல்லை.!

28. அல்லாஹ் தான் விரும்புகின்ற அடியார்களுக்கே, நேர்வழியைத் தருகிறான்! சுவனத்திற்காக அமல் செய்யும் பாக்கியத்தைத் தருகிறான்!! – அல்லாஹ் 'பிறரின் தேவையற்றவன்' الصمد என்பதற்கு இது ஓர் ஆதாரமாகும்.

29. மறுமை நாளில், இறப்பதற்கு முன் தாம் முற்படுத்தியதென்ன? பின்பு விட்டுவந்ததென்ன? என, ஒவ்வொருவரும் தம் வினைப்பயன் குறித்து, அறிந்து கொள்வர்!

30. முஷ்ரிக்குகள் திருக்குர்ஆனை எதிர்த்ததற்குக் காரணம் அவர்களின் அறியாமையே! ஏனெனில், ஒன்றை விளங்காத ஒருவர், அதன் எதிரியாகிறார்!!

31. அநியாயத்துடன் அல்லாஹ்விற்கு எந்த உறவும் கிடையாது! மனிதன்தான், தனக்குத் தானே, அநீதி இழைக்கிறான். ஆதாரத்தை நிலை நாட்டாதவரை, எவரையும் அல்லாஹ் வேதனைப்படுத்த மாட்டான்.

32. மக்கள், மறுமை நாளின் திடுக்கத்திலும் பதற்றத்திலும் இருக்கின்றபோது, மஹ்ஷர் - மன்றத்தின் நெடிய விசாரனையின்போது, கொடிய வேதனையின்போது, இவ்வுலக வாழ்வை மிகவும் அற்பமானதாகவும், சொற்பமானதாகவும் கருதுவர்.

33. மறுமையின் இழப்பு, பேரிழப்பாகும்! அதை மறுப்பது, மகா-மறதியாகும்!! ஏனென்றால் அங்கே வருந்துவதும், பாவமன்னிப்பைக் கோருவதும் எப்பயனையும் தராது.

34. எந்த மனிதரும், தனக்குத் தானே நன்மையைச் செய்திட – தனக்கு வருகின்ற தீமையைத் தடுத்திட சக்திபெறவில்லை! இந்நிலையில் அவர் பிறருக்கு உதவி புரிவது சாத்தியமா?

35. يا أيها الناس قد جائتكم موعظة من ربكم திருக்குர்ஆனின் மகத்துவமும், சிறப்பும் பேசப்பட்டுள்ளது. அது நீதிபோதனையாக – நோய்நிவாரணியாக - இறையருளாகத் திகழுகிறது..!

36. நேர்வழி மற்றும் ஈமானிய அருட்கொடை, செல்வத்தை விட சிறப்பான பெருங்கொடையாகும்.. மக்கள், தமதிறைவனுக்கு நன்றி செலுத்துக! உலகத்தைத் தேடி.., தம்மைப் படைத்தவனை மறவாதிருந்திடுக!!

37. அல்லாஹ்வைத் துதித்து வாழுக! அலட்சியம் தவிர்த்திடுக! இதன் மூலம் உள்ளத்தில் இறையச்சத்தையும், பக்தியையும் பெருக்கிடலாம்.. கட்டுப்பாடான இறையடியானாகத் திகழலாம்.

38. ‘விலாயத்’ - இறைநெருக்கம், ஈமான் மற்றும் இறையச்சத்தின் மூலம் கிட்டுகிறது.. இவ்- ‘விலாயத்’, நல்லறங்கள், மனத்தூய்மை (இக்லாஸ்), மற்றும் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றி நடத்தல் (இத்திபா.ஃ.) மூலம் அதிகரிக்கிறது.. இத்தகைய இறைநேசம் இரு நிலைகளில் சாத்தியமாகும்: அவை, ஏவப்பட்டவைகளை எடுத்து நடப்பது, விலக்கப்பட்டவைகளைத் தவிர்ந்து வாழ்வது ஆகும்.

39. இம்மையிலோ, உதவி மற்றும் கண்ணியத்திற்கான நற்செய்தி – மறுமையிலோ, சுவனத்திற்கான நற்செய்தி - என ‘நற்செய்தி’ தருவதன் மூலமாக, இறை நேசர்களை அல்லாஹ் கௌரவப்படுத்துகிறான்.

40. அல்லாஹ்வின்பால், யாரேனும், குழந்தைகளையோ - இணைவைப்பையோ - இயலாமையையோ ,கற்பித்தால் அது, தெளிவான ‘குப்ர்’ ஆகும். இவ்வாறு வாதிப்பவர் , அறிவிலி மற்றும் முட்டாள் ஆவார்.

41. அல்லாஹ்வின் மீது மட்டும், உறுதியான நம்பிக்கை கொண்டிருந்ததே, நூஹ்(அலை) அவர்களுடைய பலத்தின் இரகசியம் ஆகும்.

42. மூஸா (அலை) அவர்களின் போராட்டம், சத்தியம் மற்றும் அசத்தியத்திற்கிடையே நடைபெற்ற நிகழ்வு! எனவே ஆங்காங்கே அது, நினைவுகூரப்படுகிறது. மேலும் நபித்துவக் குரல் சத்திய-சக்தி! ஜெயித்தே தீரும் என்பதற்கான சான்று அது!!

43. முன்னோர்களைக் கண்மூடிப் பின்பற்றுதலே, அசத்திய வாதிகளின் ஆதாரமாகும். இது சீர்திருத்தம் நாடுகின்றோர் முன்னிருக்கின்ற, முக்கியப் பிரச்சினை ஆகும்.

44. தன்னிடம் பலவீனம் இருந்தாலும், இறை நம்பிக்கை மற்றும் நபித்துவத்தின் துணையுடன், மாபெரும் சக்தியைத் துணிவுடன், எதிர்கொண்டது மூஸா (அலை) அவர்களின் தனிச் சிறப்பு ஆகும். அல்லாஹு தஆலா, மேலும் ஒன்பது 9 அத்தாட்சிகளை வழங்கி, அவர்களுக்கு உதவிபுரிந்தான்.

45. அளவுக்கதிகமான செல்வம், - ஆணவம், முகஸ்துதி, மற்றும் அநீதிக்குத் துணைபோகிறது.

46. அல்லாஹு தஆலா, மூஸா (அலை) மற்றும் ஹாரூன் (அலை) ஆகியோருக்கு தொழுவதற்கும், அவர்கள் தம் வீட்டைத், தொழுகைக்கான ‘கிப்லா’ வாக ஆக்கிக் கொள்வதற்கும், இட்ட கட்டளை, தொழுகையின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. இதன் மூலம், ‘ஆத்மா’ பரிசுத்தமாக பயிற்சியளிக்கப் படுகிறது.

47. த:வா (அழைப்புப் பணி) மற்றும் இஸ்லாஹ் (சீர்திருத்தப் பணி)களின் சாத்தியமான கட்டங்கள் அனைத்தையும் கடந்த பின், அநியாயம் புரிவோரை அழிப்பதற்காக, துஆ (பிரார்த்தனை) செய்யலாம்..!

48. விசுவாசம் கொண்டோர், பலவீனம் அடைதல் மற்றும் அவர்கள் மீதான காபிர்களின் அடக்குமுறை, ஒரு (இறை) சோதனை ஆகும்.

49. ஏதேனும் ஒன்றில் சந்தேகம் வந்தால், கல்வியாளர்களிடம் வினவ, உத்தரவிடப் பட்டுள்ளது. ஏனென்றால் அடிப்படைக் கொள்கையில் சந்தேகம் வருமேயானால், அது ‘குப்ர்’ ஆகிவிடும்.

50. இறைத் தண்டனையையோ – மலகுல் மவ்தையோ கண்ட பிறகு, வேண்டப்படுகின்ற ‘தவ்பஹ்’ - பாவமன்னிப்பு ஏற்கப்படமாட்டாது.

51. வானங்களில், பூமியில் சிந்தனையைச் செலுத்துக.. ஈமான் கொள்ள பாக்கியம் கிடைக்கும்! மனித குல வரலாற்றில், பார்வையைச் செலுத்துக.. ரஸூல் மார்கள் மற்றும் விசுவாசம் கொண்டோர் வாழ்க்கையிலும், அவர்கள் அடைந்திட்ட சிறப்பான

முடிவுகள் என அனைத்திலும் கவனம் காட்டுக.. இவைகளிலும் சுவன வழியில் பயணிக்கும் பாக்கியம் (ஈமான்) கிட்டவே செய்யும்..!!

52. விசுவாசம் (ஈமான்) கொள்வோராய் இருப்பவர்கள் மட்டுமே, படைப்புகளில் காணக்கிடைக்கின்ற அத்தாட்சிகளால் - நபிமார்கள் தந்திட்ட நேர்வழியால் பயனடைவர். ஏனென்றால் இதயம் இறந்து விட்டவர்களுக்கு – கண்கள் குருடாகியவர்களுக்கு – காதுகள் செவிடாகிவிட்டோருக்கு, இவ்வத்தாட்சிகள் எதுவும் தென்படாது.

53. சந்தேகம் கொண்டோரின் சந்தேகத்தால், ஈமான் கொள்வேரின் விசுவாசம், தவறாகி விடாது! அதனால் எந்த விளைவும் ஏற்படாது.. எனவே மாற்றாரின் சந்தேகத்திற்காக, நபி (ஸல்) அவர்கள், தனது மார்க்கத்தை விட்டுவிடவில்லை! அதே சமயம் எவரையும் நிர்ப்பந்திக்கவுமில்லை!!

54. இறை அழைப்பாளர்களுக்கு இதோ சில அறிவுரைகள்! இவைகளில் அவர்கள் தனிக் கவனம் செலுத்துக! திருக்குர்ஆன் மற்றும் அல்-ஹதீஸ் உள்ளடங்கிய வஹீ - இறை செய்தியைப் பின்பற்றுதல் கட்டாயமானதாகும்! நபி (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியைப் பின்பற்றுதல் அவசியமாகும். சத்தியம் அல்லாஹ்வின் புறத்திலுள்ளதாகும்.. நபிமார்களும் அதில் தலையிட இயலாது. நபிமார்கள் மற்றும் மு.ஃ.மின்களுக்கு நற்செய்தியும் காபிர்களுக்கு எச்சரிக்கையும். த.ஃ.வா பணியில் பொறுமையின் முக்கியத்துவம்; நபிமார்களுக்கும் இறையழைப்பாளர்களுக்கும் இது ஓர் சிறப்பு. முஹம்மத் (ஸல்) சமுதாயத்தில், அழைப்புப் பணியின் சிறப்பு – நபி (ஸல்) அவர்களின் காலத்திற்குப் பிறகும் அழைப்புப் பணியில் அவர்கள் இருப்பர் .. அல்லாஹ் கடமையை நிறைவேற்றுவதில், சிறந்த நீதிமான்! அவன், அநியாயக் காரர்களைப் பழிவாங்குபவன்!!

## தொடர்பு நுட்பமான விரிவுரைகள

- ஸூரா ஹூது மற்றும் ஸூரா யூஸுபு, அத்தியாயங்களுடைய, கருத்துக்களின் கலவையாக ஸூரா யூனுஸ் திகழுகிறது. சோதனையான கட்டங்களைக் கடந்து, முன்னேற்றம் அடைந்திடுக!
- ஸூரா யூனுஸ் முதல் ஸூரா மு.ஃ.மினூன் வரை, 14 அத்தியாயங்கள் 'மக்கீ' அத்தியாயங்கள் ஆகும். (ஸூரா 'ஹஜ்'

ல் சில வசனங்கள் ‘மதனீ’ வசனங்களாக இருக்கலாம்.)

- ❖ இவ்வத்தியாயங்களில்.., பொய்ப்பிக்கப்பட்ட வரலாறு, அதன் முடிவு, காரணங்கள், தீர்வு, சரித்திர உதாரணங்கள், மற்றும் அறிவார்ந்த – உலகம் சார்ந்த – உடல் சார்ந்த அடிப்படைகள் மூலமாக எச்சரிக்கப்படுகிறார்கள்; சிந்திக்க நிர்பந்திக்கப் படுகிறார்கள்..!

**அழைப்புப் பணி, சீர்திருத்தப்பணி, மனப்பக்குவம், மற்றும் நினைவூட்டலுக்காக – சிந்திக்கவும் மனனமிடவும் உகந்த இறைவசனங்கள் மற்றும் நபிமொழி ..!**

### திருக்குர்ஆன்

وَإِذَا تُتْلَىٰ عَلَيْهِمْ آيَاتُنَا بَيِّنَاتٍ ۙ قَالَ الَّذِينَ لَا يَرْجُونَ لِقَاءَنَا ائْتِ بِقُرْآنٍ غَيْرِ هَٰذَا أَوْ بَدِّلْهُ ۚ
قُلْ مَا يَكُونُ لِي أَنْ أُبَدِّلَهُ مِن تِلْقَاءِ نَفْسِي ۖ إِنْ أَتَّبِعُ إِلَّا مَا يُوحَىٰ إِلَيَّ ۖ إِنِّي أَخَافُ إِنْ عَصَيْتُ
رَبِّي عَذَابَ يَوْمٍ عَظِيمٍ (10:15)

அவர்கள் மீது தெளிவான நம் வசனங்கள் ஓதிக் காண்பிக்கப்பட்டால், நம்முடைய சந்திப்பை நம்பாதவர்கள், “இது அல்லாத வேறு ஒரு குர்ஆனை நீர் கொண்டு வாரும் அல்லது இதை மாற்றிவிடும்” என்று கூறுகிறார்கள். அதற்கு “என் மனப் போக்கின்படி அதை நாம் மாற்றிவிட எனக்கு உரிமையில்லை, என் மீது வஹீயாக அறிவிக்கப்படுபவற்றைத் தவிர வேறெதையும் நான் பின்பற்றுவதில்லை, என் இறைவனுக்கு நான் மாறு செய்தால், மகத்தான நாளின் வேதனைக்கு (நான் ஆளாக வேண்டும் என்பதை) நான் நிச்சயமாக பயப்படுகிறேன்” என்று (நபியே!) நீர் கூறுவீராக.(10:15)

وَلَا تَدْعُ مِن دُونِ اللَّهِ مَا لَا يَنفَعُكَ وَلَا يَضُرُّكَ ۖ فَإِن فَعَلْتَ فَإِنَّكَ إِذًا مِّنَ الظَّالِمِينَ

உமக்கு (எவ்வித) நன்மையையோ, தீமையையோ செய்ய இயலாத அல்லாஹ் அல்லாததை எதனையும் நீர் பிரார்த்திக்க வேண்டாம் (அவ்வாறு) செய்வீராயின் நிச்சயமாக நீர் அநியாயக்காரர்களில் ஒருவராகிவிடுவீர். (10:106)

## அல்ஹதீஸ்

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ‘‘ஒரு முறை நான், நபி (ஸல்) அவர்களின் பின்னே, (வாகனத்தில்) அமர்ந்திருந்தேன். ‘சிறுவனே! உனக்குச் சில வார்த்தைகளைக் கற்றுத் தருகிறேன்..’ என்றனர் நபி (ஸல்) அவர்கள். பின்பு பின்வருமாறு கூறினார்கள்: ‘அல்லாஹ்வை என்றும் நினைவில் வைத்துக்கொள்; அவன் உன்னைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்வான்.. அல்லாஹ்வை நினைவில் நிறுத்து; அவனை உன்முன்னே கண்டிடுவாய்.. ஒன்றை வேண்டுகின்றபோது, அல்லாஹ்விடம் வேண்டு.. உதவி கோரினால் அல்லாஹ்விடம் உதவி கோருக! மேலும் அறிக! ஒரு விஷயத்தில், உனக்குப் பயனளிக்க, சமுதாயமே திரண்டாலும், அல்லாஹ் விதித்ததைத் தவிர, வேறெதையும் அவர்களால் பயனளிக்க இயலாது.. சமுதாயமே திரண்டாலும், அல்லாஹ் விதித்ததைத் தவிர வேறெதையும் அவர்களால், உனக்கு இடரளிக்க இயலாது’.’’ (திர்மிதி: ஹ.எண்-2516)

